# සුගතදාස ජාතික ක්‍රීඩා සංකීර්ණ අධිකාරිය

# சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

# SUGATHADASA NATIONAL SPORTS COMPLEX AUTHORITY





# 2017

## වාර්ෂික වාර්තාව

## வருடாந்த அறிக்கை

## Annual Report

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் னதொகுதி அதிகார சபை

# வருடாந்த அறிக்கை
# 2017

# சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை

1. தகவல் ஒருங்கிணைப்பு
2. விளையாட்டு நிர்வாக முகாமைத்துவம்
3. எமது நோக்கமும் எமது பணியும்
4. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையைத் தாபித்தல்.
5. நிர்வாக அமைப்பு
6. அனுமதிக்கப்பட்ட பணிக்குழு
7. இவ் அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்
8. முகாமைத்துவம்
9. வசதிகள் மற்றும் சேவைகள் வழங்கப்படும் துறைகள்
10. மானிட வள அபிவிருத்தி
11. முகாமைத்துவ சபைக் கூட்டங்களை அறிக்கைப்படுத்தல்
12. 2016 வரவு செலவிற்காக சமூக.வி.அபி நிறுவனத்தின் கணக்காய்வுப் பணிகள்
13. வருடாந்தப் பெறுகை
14. சுகததாச உள்ளக விளையாட்டுத் திடல்
    - உள்ளக விளையாட்டுத் திடல்
    - துணை விளையாட்டுத் திடல்
    - நீச்சல் தடாக கட்டடத் தொகுதி
    - உடற்பயிற்சி மத்திய நிலையம்
    - விளையாட்டு ஹோட்டல்
15. சுகததாச உள்ளக விளையாட்டுத்திடல் சார்ந்த அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்
16. சுகததாச உள்ளக விளையாட்டுத் திடலின் 2017 ஆம் ஆண்டுக்கான உத்தேச அபிவிருத்திச் செயற்திட்டங்கள்
17. திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்
18. திறந்த வெளியரங்கு சார்ந்த அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்
19. திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான உத்தேச அபிவிருத்திச் செயற்திட்டங்கள்
20. ஆர்.பிரேமதாஸ கிரிக்கட் மைதானம்
21. போகம்பர திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்
22. பெலியத்த மற்றும் வீரகெட்டிய நீச்சல் தடாகம்
23. நுவரெலியா குதிரைப் பந்தய மைதானம்
24. அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
25. நிறுவனத்தின் முழுமையான முன்னேற்றம்
26. கணக்கியல் கொள்கைகள் - 2016
27. வருமானச் செலவினக்கூற்று
28. ஐந்தொகை
29. நிதிப்பாய்ச்சல் கூற்று
30. வருமானம் - 2017
31. கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் சமகாலப்படுத்தப்பட்ட தகவல்கள்

# தகவல் ஒருங்கிணைப்பு

## நிறுவனத்தின் பெயர் - சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை

**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையினைத் தாபிப்பதற்காக சட்ட ரீதியில் 1999 இலக்கம் 17 கொண்ட பாராளுமன்றச் சட்டம் மற்றும் 2017 இலக்கம் 14 கொண்ட (மறுசீரமைப்பு சட்டம்) மூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது.**

**முகாமைத்துவ சபை**

பிரிகே. ஜே.எம்.எஸ்.எஸ். ஜயசுந்தர ஆர்.எஸ்.பி.யு.எஸ்.பி.- தலைவர்

திரு. கே.டி.எஸ். ருவன்சந்ர - அங்கத்தவர்
(பணிப்பாளர் நாயகம் - இலங்கை அபிவிருத்தி திணைக்களம்)
(2016 ஜீன் வரை)

திரு. எஸ்.ரி.ஆர்.ரி.எம்.எஸ்.பி. பண்டார அவர்கள் - அங்கத்தவர்
(2016 ஜூன் வரை)

திருமதி. சந்தியா சிறிமான - அங்கத்தவர்
(2016 ஜூலை தொடக்கம்)

திரு. எஸ்.டப். மதநாயக்க (பணிப்பாளர் -
அரச கணக்குத் திணைக்களம் ) - அங்கத்தவர்

திரு. எஸ்.ஈ.ஆர்.பி.எம்.எஸ்.பி. பண்டார - அங்கத்தவர்
(பணிப்பாளர் நாயகம் - இலங்கை அபிவிருத்தித் திணைக்களம்)
(2016 ஜூலை தொடக்கம்)

திரு. கே.ஏ. ஆலோக சிறிகாந்த - அங்கத்தவர்

திரு. ஐ.ஆர்.யு. மகேஷ் விஜேரட்ன - அங்கத்தவர்

திரு. டப்.ரி.பி. கெப்ரால் - அங்கத்தவர்

திரு. சுனில் குணவர்தன - அங்கத்தவர்

திரு. சம்பத் திசாநாயக்க - அங்கத்தவர்

திரு. எச்.எல்.எம்.எச். பண்டார - அங்கத்தவர்

ஜனாப். ஏ.எம். றகீப் - அங்கத்தவர்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

திரு. எஸ்.ஜி. மதநாயக்க - தலைவர்
(பணிப்பாளர் - அரச கணக்குத் திணைக்களம்)

திரு. எஸ்.ஈ.ஆர்.பி.எம்.எஸ்.பி. பண்டார - அங்கத்தவர்
(பணிப்பாளர் நாயகம்- விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்)

திரு. கே.ஏ.ஏ. சிறிகாந்த - அங்கத்தவர்

திரு. எச்.ஏ.டப். அபேகுமார - அங்கத்தவர்
(பிரதான உள்ளகக் கணக்காய்வு - விளையாட்டுத் துறை அமைச்சு)

திருமதி. ரி.எம்.ரி. மதுசானி ரணவீர - செயலாளர்

**மேற்பார்வை மட்டத்திலான பங்கேற்பு**

திரு.டி.எஸ்.ஏ.எஸ். அனுலசிறி - அங்கத்தவர்
(கணக்காய்வு அத்தியட்சகர் - அரச கணக்காய்வுத் திணைக்களம்)

**3 வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற உத்தியோகத்தர்கள்**
திரு. எஸ்.ரி. ரத்நாயக்க
(கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் முகாமைத்துவக் குழுவில்
பங்கேற்ற உத்தியோகத்தர்கள்)

திரு. காமினி சந்ரசிறி - செயலாளர் (பதில்)

**கணக்காய்வு**

கணக்காய்வாளர்,
கணக்காய்வுத் திணைக்களம
இல 306/7, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல



## பதவி நிலை உத்தியோகத்தர்கள்

திரு. எஸ்.எஸ்.கே. குணவர்தன - பணிப்பாளர்
திரு. சமிந்த கே உடகும்புர - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) (2017-05-23வரை)
திரு. அநுராத விதானகமாச்சி - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) (2017-11-23வரை)
திரு.சீ.எச்.ஜே. ரூபசிங்ஹ - உதவிப் பணிப்பளர் (நிதி)
திரு. சமன் பண்டார பயதாச -கணக்கு உத்தியேதகத்தர்
திரு. சமன் பண்டார பியதாச -உதவிப் பணிப்பாளர் (நிதி)
செல்வி. டப்.எம்.வை.ஏ.விஜேசூரிய - உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு)
திருமதி.கயனி தீபிகா குமாரி -உதிவிப் பணிப்பாளர் (தொழில் நுட்பம்) (2017ஆகஸ்ட் தொடக்கம்.
திரு. கபில முணசிங்ஹ - சட்ட உத்தியோகத்தர்.
செல்வி. ரி.எல்.டி.எம்.ரணவீர - உள்ளக கணக்காய்வாளர்
திருமதி. அனோஜா பிரியதர்சனி - நிருவாக உத்தியோகத்தர்
திரு. கே.பந்துதிலக - தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர்
திருமதி.பி.டி.என். பிரபா கிரிஅல்ல - விளையாட்டு மைதான மகாமையாளர் (திறந்த வெளி)
திரு. பி.டி. சம்பத் பெரேரா - விளையாட்டு மைதான மகாமையாளர் (ஒதுக்கீடு)
மேஜர் எச்.ஜி. உபாலி கமகே - விளையாட்டு மைதான மகாமையாளா (பாதுகாப்பு)
திருமதி. டி.டி.எஸ். லியனாரச்சி - விளையாட்டு மைதான மகாமையாளர் (உள்ளக)
திரு. எஸ்.எம்.ஐ. சில்வா - விளையாட்டு மைதான மகாமையாளர் (போகம்பர)
செல்வி. சானிகா பிரபாஸ்வரி - சந்தைப் படுத்தல்/கொளடவனவு உத்தியோகத்தர்.

**பெறுகை**

**மேற்பார்வை :**
திரு. எஸ்.எஸ்.கே. குணவர்தன (பணிப்பாளர்)

திரு. சி. அனுராத விதானகமாச்சி (உதவிப் பணிப்பாளர் - நிர்வாகம்)

திருமதி.எச். அனோஜா பிரியதர்ஷினி (நிர்வாக உத்தியோகத்த

**கணணி தட்டெழுத்தாளர் :**
திரு. அஜித் இந்திக்க (முகாமைத்துவ உதவியாளர்)

திரு. எம். திலின சசிரங்க முதுநாயக்க (முகாமைத்துவ உதவியாளர்)

**மொழி பெயர்ப்பாளர் (தமிழ், ஆங்கில மொழி)**
ஏ.ஏ.எம். நுஸ்ரத் (அரச மொழி பெயர்ப்பாளர்)

**அச்சு :**
சிலிசினே ரூபவாஹினி நிறுவனம்

**வங்கி**

இலங்கை வங்கி - கிரேன்ட்பாஸ் கிளை

**முகவரி**

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை
த.பொ.இ. 2211, ஆதர் டி. சில்வா மாவத்தை,

தொலைபேசி : 011-2445677, 2384385, 2384490

பெக்ஸ் : 011-2445675

மின்னஞ்சல் : sugathadasaindoor@gmail.com

# எமது நோக்கமும் பணியும்

## நோக்கம்

ஆசியாவின் முதற்தர சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வசதிகளைக் கொண்ட விளையாட்டுக் கட்டடத் தொகுதியாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையினை மாற்றியமைத்தல் மற்றும் அதன் கீழுள்ள ஏனைய விளையாட்டுக் கட்டடத் தொகுதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கையின் விளையாட்டு அபிவிருத்திக்கான வசதிகளை சலுகை அடிப்படையில் வழங்குதல்.

## பணிக்கூற்று

சர்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் விளையாட்டுத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் மற்றும் இலங்கை விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகள்கொண்ட ஆசிய வலயத்தின் சர்வதேச மட்டத்திலான வசதிகள் கொண்ட முன்னணி சர்வதேச கட்டடத் தொகுதியாக மாற்றியமைத்தல்.



# சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையினைத் தாபித்தல்.




சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி பொறுப்பு நிதியமாக 1995.02.01 ஆம் திகதி தொடக்கம் அமுலக்குவரும் வகையில் விளையாட்டுத் துறை அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் 1999 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையாக மாற்றியமைக்கும் வகையில் 1999 இலக்கம் 17 கொண்ட சட்டம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் சட்டம் 1999.09.01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் அங்கீகரிக்கப்பட்டதுடன் அன்றைய தினம் தொடக்கம் இத்தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையாகத் தாபிக்கப்பட்டது.

இவ் அதிகார சபையின் முகாமைத்துவப் பணிகள் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் முகாமைத்துவ சபை மூலம் முன்னெடுக்கப்படுவதுடன் அச்சபை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

1. தலைவர்- விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

2. செயற்பாட்டுப் பணிப்பாளர் - விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சிரினால் நியமிக்கப்படும்.
3. விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது பிரதிநிதி
4. தேசிய அரச பேரவையின் 1973 இலக்கம் 25 கொண்ட விளையாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம்
5. திறைசேரியின் பிரதிநிதி
6. இதற்கு மேலதிகமாக விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் 07 அங்கத்தவர்கள் அடங்கியுள்ளதுடன், மேற்கூறப்பட்ட செயற்பாட்டுப் பணிப்பளரக்காக அங்கத்தவர்களில் ஒருவரை நியமிக்க முடியும்.


சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை - ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு
தலைவர்
பணிப்பாளர் - (01)
HM (1-1) - 1
MM (1-3) - 5
JM (1-1) - 10
MA (2-1) - 5
MA (1-1) - 55
PL (3) - 7
PL (2) - 17
PL (1) - 224

## அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை

முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய நிரந்தர மொத்த ஊழியர் எண்ணிக்கை 343 ஆகும். 2017.12.31 ஆம் திகதியன்று இவ் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நிறுவனத்தில் சேவையாற்றிய எண்ணிக்கை 94% மாகும். அது கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| | பதவி | சம்பளப் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட நிரந்த ஊழியர் எண்ணிக்கை | ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை | 2017.12.31 ஆம் திகதியன்று ஊழியர் எண்ணிக்கை | 2017.12.31 ஆம் திகதியன்று ஒப்பந்தத்த ிற்க மைய ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடம் மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | தலைவர் | | 1 | - | 1 | - | 0 |
| | செயற்பாட்டுப் பணிப்பாளர் | | 1 | - | 1 | - | 0 |
| சிரேஷ்ட மட்டத்தின் முகாமைத்துவம் | | | | | | | |
| | பணிப்பாளர் | HM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்கள் | | | | | | | |
| | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | MM 1-3 | 1 | - | 0 | - | 1 |
| | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (நிதி) | | 1 | - | 0 | - | 1 |
| | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு) | | 1 | - | 1 | - | 0 |
| | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | | 1 | - | 1 | - | 0 |
| | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | | 1 | - | 0 | - | 1 |
| | சட்ட உத்தியோகத்தர் | | 1 | - | 1 | - | 0 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | | | | | | | |
| | தலைவரின் அந்தரங்கச் செயலாளர் | JM 1-1 | 0 | 1 | 0 | 1 | 0 |
| | உள்ளகக் கணக்காய்வாளர் | | 1 | - | 1 | - | 0 |
| | நிர்வாக உத்தியோகத்தர் | | 1 | - | 1 | - | 0 |
| | கணக்கு உத்தியோகத்தர் | | 1 | - | 1 | - | 0 |
| | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | | 1 | - | 1 | - | 0 |
| | பராமரிப்பு உத்தியோகத்தர் | | 1 | - | 0 | - | 1 |
| | கொள்வனவு உத்தியோகத்தர் / சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் | | 1 | - | 1 | - | 0 |
| | பாதுகாப்பு முகாமையாளர்கள் | | 1 | - | 1 | - | 0 |
| | விளையாட்டு மைதான முகாமையாளர் (உள்ளகம்) | | 1 | - | 1 | - | 0 |
| | விளையாட்டு மைதான முகாமையாளர் (திறந்த வெளியரங்கு) | | 1 | - | 1 | - | 0 |
| | விளையாட்டு மைதான முகாமையாளர் (போகம்பற) | | 1 | - | 1 | - | 0 |
| | விளையாட்டு மைதான முகாமையாளர் (பெலியத்த) | | 1 | - | 1 | - | 0 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) | | | | | | | |
| | தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) | MA 2-1 | 1 | - | 0 | - | 1 |
| | தொழில்நுட்ப உதவியாளர் (மின்சாரம்) | | 1 | - | 1 | - | 0 |
| | களஞ்சியப் பொறுப்பாளர் | | 3 | - | 3 | - | 0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | புத்தகம் பேணுனர் | | 1 | - | 1 | - | 0 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) | | | | | | | |
| | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-1 | 31 | - | 31 | - | 1 |
| | கள நிர்வாகி | | 1 | - | 1 | - | 0 |
| | பணிப் பரிசோதகர் | | 2 | - | 2 | - | 0 |
| | விளையாட்டு உத்தியோகத்தர் | | 8 | - | 6 | - | 2 |
| | விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் | | 1 | - | 1 | - | 0 |
| | பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் | | 3 | - | 2 | - | 1 |
| | பாதுகாப்பு உத்தியோகத்தர் | | 18 | - | 18 | - | 0 |
| | முகாமைத்துவ உதவியாளர் (நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் (நுவரெலியா) | | 1 | - | 0 | - | 1 |
| | பாதுகாப்பு உத்தியோகத்தர் (நிர்வாகம்) நுவரெலியா | | 1 | - | 0 | - | 1 |
| ஆரம்பத் திறன் | | | | | | | |
| | மின் தொழில்நுட்பவியலாளர்மூ | PL 3 | 1 | - | 1 | - | 0 |
| | சாரதி | | 6 | - | 6 | - | 0 |
| ஆரம்பப் பகுதித் திறன் | | | | | | | |
| | தச்சுத் தொழில் | PL 2 | 3 | - | 3 | - | 0 |
| | மேசன் | | 3 | - | 3 | - | 0 |
| | பொருத்துனர் | | 3 | - | 3 | - | 0 |
| | வர்ணம் பூசுனர் | | 3 | - | 3 | - | 0 |
| | இரும்பு பொருத்துனர் | | 3 | - | 3 | - | 0 |
| | துவிச்சக்கர வண்டி செய்தியாளர் | | 2 | - | 2 | - | 0 |
| ஆரம்பம் பகுதி கலைசாரா | | | | | | | |
| | விளையாட்டு மைதான உதவியாளர் | PL 1 | 111 | - | 107 | - | 4 |
| | பாதுகாப்பு உத்தியோகத்தர் | | 108 | - | 101 | - | 7 |
| | அலுவலக பணி உதவியாளர் | | 10 | - | 9 | - | 1 |
| | | மொத்தம் | **342** | **1** | **321** | **1** | **21** |

# அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

## பொறுப்புக்கள்

1. முகாமைத்துவத்திற்குட்படுத்தல், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் தேசிய சொத்தாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையினைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
2. சகல வசதிகள் மற்றும் சேவைப் பராமரிப்புக்களை முன்னெடுத்தல்.
3. கட்டடங்களுக்கு மற்றும் கட்டமைப்புகளுக்குத் தேவையான அபிவிருத்திகளை மேற்கொள்ளல் அல்லது மாற்றங்களை மேற்கொள்ளல்.
4. இலங்கைப் பிரஜைகளுக்கு மற்றும் விசேடமாக இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு விளையாட்டில் தனது திறமைகளை மேம்படுத்துவதற்காகவும் அவர்களின் உடல் விருத்தி மற்றும் சுகாதாரத்தை விருத்தி செய்யக்கூடியவாறு பணிப்பாளர் சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு தேவையான வசதிகளை அவர்களுக்கு வழங்குதல்.
5. விசேடமாக கிராமிய மட்டங்களில் விளையாட்டுத் துறையினை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு விளையாட்டுத் தொடர்பான பயிற்சிப் பாடநெறி மற்றும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
6. தேசிய மற்றும் சர்வதேச விழாக்களுக்காகத் தேவையான வசதிகளை முகாமைத்துவ சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குதல்.
7. இலங்கையில் விளையாட்டு மற்றும் கழியாட்ட வசதிகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு சர்வதேச மற்றும் உள்நாட்டு விளையாட்டுப் பயிற்சி அமைப்புக்கள், விளையாட்டு நிறுவனங்களுடன் இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்.
8. எமது அதிகார சபையின் வசதிகள் முகாமைத்துவ சபையினால் விதிக்கப்படும் நிதிப் பரிசோதனைகளுக்குட்பட்ட நியாயமாக கட்டணங்களுக்கமைய பாடசாலைகளுக்கு, இளம் விளையாட்டுக் கழகங்களுக்கு மற்றும் விளையாட்டு அமைப்புக்களுக்கு வழங்குதல்.

## பணிகள்

1. மேற்கூறப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் எமது அதிகார சபையினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் தேசிய விளையாட்டுச் சங்கம், பாடசாலை விளையாட்டுச் சங்கம் மற்றும் அரசாங்கத்தைப் போன்று தனியார் நிறுவனங்களுக்காகவும் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வசதிகளின் கீழ் சலுகைகள் வழங்கப்படும்.
2. தேசிய மற்றும் சர்வதேச சுவட்டு மற்றும் மைதான

விளையாட்டுக்களுக்காக விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்குப் பயிற்சியளிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

3. சர்வதேச மட்டத்திலான போட்டிகளை பகல் நேரங்களைப் போன்று இரவு நேரங்களிலும் நடாத்தத் தேவையான வசதிகளை வழங்குதல்.
4. குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய மட்டத்தில் திறமை கொண்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதன் மூலம் அவர்களின் திறமைகளை மேம்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

5. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நீச்சல் போட்டிகளை நடாத்துவதற்காகத் தேவையான பயிற்சி மற்றும் சுழியோடும் தடாக வசதிகளை வழங்குதல்.
6. பரீட்சை, கருத்தரங்கள், மாநாடு மற்றும் விழாக்கள் பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்காகத் தேவையான வசதிகளை வழங்குதல்.
7. பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.

## சுகதாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் நோக்கம்

1. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ செயற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் அபிவருத்தி செய்தல்.

2. விளையாட்டுப் பொருளாதாரத்தின் மற்றும் விளையாட்டு சுற்றுலா வர்தகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி விளையாட்டு மற்றும் களியாட்ட செயற்பாடுகள் மற்றும் வசதிகளை விருத்தி செய்தல்.

3. நாட்டின் விளையாட்டு முன்னேற்றங்களுக்காக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் காணப்படும் வசதிகள்.

4. சமூக நல்லிணக்கத்திற்கு மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவக் கூடிய முறைகளாக விளையாட்டு மற்றும் களியாட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தல்.

## முகாமைத்துவம்

### வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும் துறைகள்

பகல் காலத்தைப் போன்று இரவு நேரங்களிலும் வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கக்கூடிய விசேட இயலுமைகளைக் கொண்ட சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை விளையாட்டு, சுகாதாரம், கல்வியைப் போன்று கழியாட்டம் ஆகிய துறைகளுக்காக வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் தேசிய ரீதியில் கொண்டுள்ள பாரிய பங்களிப்புக்களை மேற்கொள்ளக்கூடிய பலத்துடன் செயற்படுகின்றது. விசேடமாக விளையாட்டுத் துறைக்காக சர்வதேச மட்டத்தில் சேவைகள் மற்றும் வசதிகளை வழங்கும் முன்னோடி நிறுவனமாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அமைந்துள்ளது.

### விளையாட்டுக்கள்

மெய்வல்லுனர் விளையாட்டு, றகர், வலைப்பந்து, கிரிக்கட், கூடைப்பந்து, ஸ்கொஸ், கைப்பந்து, கரப்பந்து, வெட்மின்டன், மேசைப்பந்து, ஜுடோ, மல்யுத்தப் போட்டி, வுசு, குத்துச் சண்டை, டைக்கொண்டோ, கராத்தே, ஜம்னாஸ்ரிக் ஆகிய விளையாட்டுக்களுக்காக சர்வதேச வசதிகளை வழங்குதல்.

### சுகாதாரம் மற்றும் கல்வி

தேசிய மற்றும் சர்வதேச விழா, செயலமர்வு, பயிற்சிப் பாடநெறி, உடற்பயிற்சிப் பாடநெறி, நீச்சல் மற்றும் உயிர்க் காப்புப் பாடநெறி, கண்காட்சிகள், கூட்டங்களுக்காக சர்வதேச மட்டத்திலான சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

### பொழுதுபோக்கு

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பாரிய கண்காட்சிகளுக்காக சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

**வர்த்தகப் பிரச்சார மற்றும் விளம்பரம்**

சந்தைப்படுத்தலுக்குரியதாக அசையாத புகைப்படங்களை எடுப்பதற்காக மற்றும் வீடியோ ஒலிநடாக்களுக்காகத் தேவையான பின்புல வசதிகளை வழங்குவதன் மூலம் மிகவும் பிரபல்ய வர்த்தக விளம்பரங்களை சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தெகுதி அதிகார சபை சார்ந்த இடங்களில் படம் பிடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட வேண்டும். அத்துடன் உயர் தரத்திலான LED விளம்பர பலகை திறந்த வெளி விளையாட்டு மைதானத்தில் தாபிக்கப்பட்டுள்ளது

**மேற்கூறப்பட்ட சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை கீழ்க் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களைக் கொண்டமைந்துள்ளது.**

1. சுகததாச உள்ளக விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் தடாகக் கட்டடத் தொகுதி
2. சுகததாச விளையாட்டு ஹோட்டல்
3. சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்
4. ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கட் விளையாட்டு மைதானம் (2006.11.01 தொடக்கம் 30 வருட காலங்களுக்காக இலங்கை கிரிக்கட் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது)
5. போகம்பற திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்
6. வெலியத்த மற்றும் வீரகெட்டிய நீச்சல் தடாகம்
7. நுவரெலிய குதிரைப் பந்தய மைதானம்

## மானிட வள அபிவிருத்தி

2017 நிதியாண்டுக்குள் ஊழியர் உக்குவிப்புக்கள் மற்றும் திறமைகளை விருத்தி செய்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்ட ஆண்டாகும். இவ்வாண்டுக்குள் கீழ்க் குறிப்பிடப் பட்ட விடயத் துறைகளுக்கமைவாக பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சிகளை நடாத்த உயர் நிருவாக அதிகாரப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

| தொ.இல | பாடநெறி | கால எல்லை | பங்கேற்பு | நிதி ரூபா. |
|---|---|---|---|---|
| வெளிநாட்டுப் பாடநெறி | | | | |
| 01 | Saltex Exhibition and Ground Development Training Course | From 2017-10-22 To 2017-11-05 | Mr.E M T Ekanayake Mr.W M N C K Senarathne | Rs.1,027,200.00 |
| 02 | Saminar on Sports Facilicity Managemen t and maintenance For Sri Lanka | From 2017-07-05 To 2017-07-25 | Ms.Yamuna Wijesooriya | |

# முகாமைத்துவ அறிக்கைப்படுத்தல்.

நிறுவன மாதாந்த முன்னேற்றங்கள் விளையாட்டுத் துறை அமைச்சிற்கு அறிக்கைப்படுத்த தொடர்ச்சியாக மாதாந்தம் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் 3 வது காலாண்டு இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து செயற்பாட்டு அறிக்கையினை உரியவாறு சமர்ப்பிப்பதற்கும் முகாமைத்துவ சேவைத் திணைக்கம் வரவு செலவுத் திணைக்களம், குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம் ஆகிய திணைக்களங்களுக்கு புள்ளிவிபர தகவல்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2017 ஆம் ஆண்டுக்குரிய முகாமைத்துவக் கூட்டங்கள் மற்றும் எட்டப்பட்ட தீர்மானங்கள்

இவ் அதிகார சபையின் முன்னேற்றங்களுக்குரியதாக தீர்மானங்களை மேற்கொள்ள முகாமைத்துவ சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறுகின்றது. 2017 ஆம் ஆண்டுக்குரியதாக முகாமைத்துவ சபையின் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அக்கூட்டங்களில் எட்டப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் கீழ்க் குறிப்பிட்டவாறு காணப்படுகின்றது.

| தொ. இல | திகதி | விடயங்கள் | விபரங்கள் |
|---|---|---|---|
| 01 | 2017 ஜனவரி | சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு இடையே காணப்படும் மின் பொறியியல் மற்றும் குளிருட்டி பராமிரிப்பு சேவை உடண்படிக்கையினை பதுப்பித்தல். | சுகததாச உள்ளக, திறந்த வெளியரங்கு விழளையாட்டு மைதான மற்றும் விளையாட்டு ஹோட்டல் ஆகிய இடங்களில் மின் பொறியியல் இயங்தியர மற்றும் குளிரூட்டல் தொகுதி பராமரிப்புச் சேவை அரச பொறியில் கூட்டுத்தாபனத்தின் சுமார் 20 ஆண்டு காலமாக பேனப்படுவதுடன் அச்சேவை உடன்படிக்கை 2016-12-31 ஆம் திகதியுடன் நிறைவடைவதனால் 2017 ஆம் ஆண்டிற்காக புதிய சேவை உடன்படிக்கை அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>சமர்ப்பிக்கப்ட்டிருந்த உடன்படிக்கை முகாமைத்துவ சபையினால் கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து ஆண்டுகளிலும் மாதாந்த சேவைக் கட்டண அதிகரிப்பு இடம்பெற்றுள்ளமையினால் அதன் சுருக்கத்தை தயாரித்து சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.<br><br>20 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் பூராகவும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் இவ்வதிகார சபையின் மின் பொறியியல் மற்றும் குளிரூட்டல் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதனால் அந்நிறுவனங்களினால் உரிய சேவை தொடர்பில் ஏகபோக உரிமை காண்பிக்க முடியுமென, முகாமைத்துவ சபையினால் சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>பராமரிப்பு முற்றும் சேவை உடன்படிக்கை தலைவர் சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பராமரிப்பு மற்றும் சேவைக்கட்டடணம் தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தின் பொது முகாமையாளர் (இயந்திரம் மற்றும் மின்சாரம்) மற்றும் தலைவருடன் நடாத்தப்பட்டதாகவும், உரிய கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதற்கான காரணமாக 2017ம் ஆண்டில் அனைத்து அரச ஊழியர்களுக்காக அதிகரிக்க உள்ள சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்பில் குறிப்பிட்டதாகவும் தலைவர் சு.தே.வி.க.அதி.சபையினால் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தினால் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பிலான விபரங்களை தயாரிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென முகாமைத்துவ சபை அறிவித்துள்ளதுடன் இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணிகள் உரிய தரங்கள் மற்றும் பண்புசார் தரம் கொண்டதாக |

| | | | |
|---|---|---|---|
| | | | முன்னெடுக்கப்படுகின்றதா என்பது தொடர்பில் மேற்பார்வை செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டது.<br><br>அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தினால் உள்நாட்டு/வெளிநாட்டு விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய விழாக்களுக்காக சேவைப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இச்சேவைக்குரிய சேவைப்பங்காளர்களினால் முறைப்பாடுகள் மேற் கொள்ளப்படவில்லை என்றும் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் தொடர்பாக திருப்தியடைய முடியுமென தலைவர் சு.தே.வி.க அதி.சபையினால் அறிவிக்கப்பட்டது.<br><br>அடுத்த ஆண்டில் மின் பெறியியல் மற்றும் குளிரூட்டல் இயந்தர பரமரிப்பு சேவைகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் புதிய உடண்படிக்கை கைச்சாத்தப்படுவதாயின் உரிய ஒப்பந்தம் தெடர்பாக.<br><br>பகுப்பாய்வு மேற்கொண்டு அறிக்கை தயாரிக்க மற்றும் 3 வது தரப்பு மூலம் அச்சேவையை பெற்றுக் கொள்வதற்கு காணப்படும் இயலுமைகள் தொடர்பிலும் கண்டறியுமாறு உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) இற்கு ஆவோசனை வழங்கப்பட்டது.<br><br>2017ம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ள உத்தேச உடன்படிக்கையில் அடங்கும் மாதாந்த சேவைக் கட்டணம்- ரூ1500,000,000 (வரி இன்றி) தொடர்பில் மீண்டும் அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவது பொருத்தமானதென தீர்மாணிக்கப்பட்டதுடன், அதற்கமைய எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்ள முகாமைத்துவ சபையினால் அங்கிகாரம் வழங்கப்பட்டது. |
| 02 | | சுகததாச விளையாட்டு ஹோட்டல் பழுதுபார்ப்பு மற்றும் நவீன மயப்படுத்தப்பட்டதன் பின்னர் மிண்டும் சேவைக்காக திறத்தல் | சுகததாச விளையாட்டு ஹோட்டல் ஆரம்பிக்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேற்பட்டது என்பதால் அதில் புணரமைக்க வேண்டிய இடங்கள் கூடுதலாக இருப்பதனால் 2016ம் ஆண்டில் உரிய புணரமைப்புப் பணிகளை மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டதுடன், நிதி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட ரூபா 60 மில்லியன் விசேட நிதி ஓதுக்கீட்டின் கீழ் புணரமைப்பு மற்றும் நவீன மயப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>மேற்கொள்ளப்படும் புணரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தும் பணிகளைத் தொடர்ந்து 2017 மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் சுகததாச விளையாட்டு ஹோட்டல் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைப் போன்று பல்வேறுபட்ட விழாவிற்காக வசதிகள் வழங்கப்பட்ட உள்ளன.<br><br>இதற்கு முன்னர் நிறுவனத்தின் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி தேவையான சேவைத் தேவைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் தற்போது மிக உயரிய மட்டத்தில் சேவைகள் மற்றும் வசதிகளை வழங்க இயலுமைகள் காணப்படுவதனால், கீழ் குறிப்பிடப்பட்ட முறைகள் ஊடாக அவ் விடத்தின் நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்ள மற்றும் சேவையின் தேவையின் நிவர்த்தி செய்ய முடியுமாயின் உரிய தரங்களைக் கொண்ட சேவையை வழங்குவதற்கான இயலுமைகள் தொடர்பில் முகாமைத்துவ சயினால் கலந்துரையாடப்பட்டது.<br><br>(அ). பெறுகை செயற்பாடுகள் மூலம் வெளித்தரப்பிற்கு குத்தகைக்கு வழங்குதல்.<br><br>(ஆ). அரச - தனியார் பங்கேற்பு முறை<br><br>(இ). விளையாட்டு ஹோட்டலுக்காக புதிய பணியாளர் சபை முகாமைத்தவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரித்தல்.<br><br>பெறுகை செயற்பாடுகள் மூலம் வெளித்தரப்பிற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக ஹோட்டல் கைத்தொழிலுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரச மற்றும் தனியார் பிரபல நிறுவனங்களின் யோசனைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. முப்படை வீரர்களினால் ஹோட்டல் பராமரிப்பு மற்றும் நிருவாக செயற்பாடுகளை சமீப காலம் தொடக்கம் மேற்கொள்வதனால் அந்நிறுவனங்களினால் யோசனைகளைப் பெற்றுக்கொள்வது |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருத்தமானதென தீர்மாணிக்கப்பட்டது.<br><br>அரச மற்றும் தனியார் தரப்பு பங்கேற்பு முறைகள் மூலம் விளையாட்டு ஹோட்டல் பராமரிப்பு மற்றும் நிருவாகப் பணிகளுக்காக யோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் இதன் போது தலையீடுகள் வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியது விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் தங்குமிட வசதிகளை வழகங்குவது தொடர்பில் என்பதனையும் அதற்காக கூடுதலாக முன்னுரிமை மற்றும் கவனத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டது. அத்துடன் இச் செயற்பாட்டை அமுல்படுத்துவதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அறிவிக்கப்பட்டது..<br><br>விளையாட்டு ஹோட்டல் மூலம் விளையாட்டு வீரர்கள் வீரா்ங்கனைகளுக்காக தங்குமிட வசதிகளை வழங்குவது பிரதான நோக்கம் மற்றும் எதிர்பார்ப்பு என்பதனால் அதற்காக தலையீடு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமமென கலந்துரையாடப்பட்டதுடன் விளையாட்டு ஹோட்டலை வழங்கும் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு விளையாட்டு வீரர்கள்,வீராங்கனைகளின் தங்குமிட வசதிகளை வழங்குவது தொடர்பிலான சரத்தை கட்டாயமாக உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முகாமைத்துவ சபை தீர்மானித்தது.<br><br>புதிய பணியாளர் சபை விளையாட்டு ஹோட்டலுக்காக தாபிக்கப்படுவதாயின் அதற்காக தேவையான பணியாளர் சபையை இணங்காணல் மற்றும் அவர்களின் சம்பளம் உட்பட கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான செலவினம், சேவையை பூர்த்தி செய்யும் வரை கணிப்பீடு செய்ய வேண்டுமென்றும் உதவிப்பணிப்பாளர் (நிருவாகம்) இற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கமைய விளையாட்டு ஹோட்டலுக்காக ஊழியர் கட்டமைப்பை வகுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.<br><br>விளையாட்டு ஹோட்டலை முன்னெடுப்பதற்காக பல முறைகளை இணங்கண்டு அச்சகல விடயங்களையும் பகுப்பாய்விற்கு உட்படுத்துவது பொருத்தமானதென முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இவ்விடயம் தொடர்பில் முகாமைத்துவ சபையினல் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை அடிப்படையாக் கொண்டு கௌரவ விளையாட்டுத் துறை அமைச்சரை அறிவுறுத்தி, அவரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது பொருத்தமானதென தலைவர் சுகதாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையினால் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>விளையாட்டு வீராகளின் தங்குமிட வசதிகள் மாத்திரமின்றி பல்வேறுபட்ட விழாக்களுக்காக வசதிகளை வழங்க முடியும் என்பதனால் அதற்காக தேவையான உணவக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது மதுபான வழங்கல் அனுமதிப்பத்திரம் 2008 ஆம் ஆண்டிற்கு பின்னர் சமகாலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் மற்றும் சுகதாதச விளையாட்டு ஹோட்டலுக்காக ஈ வகுப்பின் அதிதிகளின் இல்லங்களின் கீழ் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டிருந்த மதுபான அனுமதிப்பத்திரத்தை மீள புதுப்பிக்க தேவையான எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| 03 | | பத்து மாத வீடமைப்புக் கடன் நிதி | பணியாளர் சபைக்காக செலுத்தப்பட்ட 10 மாத வீடமைப்புக் கடன் நிதியில் 04 வது கட்ட கொடுப்பனவு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ படிவம் குறித்து நீண்டகாலம் கலந்துரையாடப்பட்டதுடன், அரச துறையினால் பயன்படுத்தப்படும் சுற்றறிக்கையை உரியதாகக் கொண்டு கடன் நிதியை செலுத்தவதற்கும் மறுசீரமைப்புக் கடன் நிதி ரூபா 250,000/= உயர்ந்த பட்சம் வரை செலுத்துவதற்கு மற்றும் அக்கடன் நிதிக்காக தேவையான நிதி ஒதுக்கீடு அறவிடப்படும். கடன் நிதியின் மூலம் செலுத்துவதற்கு முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| 04 | *2017 பெப்ரவரி* | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் காணப்படும் மின் கோபுரத்தை பழுதுபார்த்தல் மற்றும் சா்வதேச போட்டித் | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் காணப்படும் 04 கோபுரங்களை 25 வருடங்களை விட பழமைவாய்ந்தது என்பதுடன் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்புப் பணிகள் மற்றும் மின் பொறியியல் உபகரணங்களை மீள தாபிப்பத்து பேன வேண்டும். இவ் மின் கோபுரங்களில் இரும்பு உதவியுடன் மின் குமிழ்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிலத்திற்குப் பொருத்தப்பட்டுள்ள இரும்பின் உதிவவியின் மூலமாகும். இவ் இரும்பின் நிலத்துடன் தொா்புபடும் பிரிவு துருப்பிடுத்துள்ளமையினால் அவ்விடத்தை புணரமைக்க அல்லது மீள் தாபிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதுடன், |

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்களுக்காக மின் கொள்ளவினை அதிகரித்தல் | இரும்பு உதவி பொருத்தப்பட்டுள்ள ஒரு சில இடங்கள் தாழ் இறங்கியுள்ளன.<br><br>மேலும் இவ் மின் கோபுரங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள மின் கம்பி தொகுதிகள் மற்றும் ஒளியுட்டப்படும் உபகரணங்களும் காலவதியாகயுள்ளமையினால் பயன்பாட்டில் இருந்து அகற்ற வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.<br><br>அத்துடன் இம்மின் கோபுரத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள மின் குமிழ் மற்றும் அதற்காக பயன்படுத்தப்படுளள் ஏனைய பாகங்கள் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் பயன்பட்டவைகள் என்பதுடன், ஏற்கனவே இம்மின்குமிழ் மற்றும் ஏனைய உபகரணங்களை சந்தையில் இணங்காண்பது சிரமமாக இருப்பதுடன், கொள்வனவு செய்யும் போது கூடுதலாக விலையினை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.<br><br>தேசிய மின் கோபுரங்களில் தற்போது காணப்படும் மின் கொள்வனவு மட்டம் 600 LUX என்பதுடன், ஏற்கனவே சர்வதேச மட்டத்தினை காற்பந்து/ரக்பி போட்டித் தொடர்களுக்காக பயன்படுத்தப்படும் மின் கொள்வனவு மட்டம் 1200 - 1700 LUX இருக்க வேண்டும். தற்போது காணப்படும் மின் கொள்வனவு மட்டத்தில் விளையாடும் போது விளையாட்டு வீரர்களின் 03 நிழல்கள் காட்சிப்படுவதனால் மின் கொள்வனவு மட்டம் விருத்தி செய்யப்படும் வேளையில் நிகழ் தென்படக் கூடிய காட்சி இல்லாமல் போகும்.<br><br>மேற்கூறப்பட்டவாறு மின் கம்பி மற்றும் மின் குமிழ் மீள தாபிக்கப்படும் பட்சத்தில் தற்போது பயன்படுத்தப்படும் மின் கோபுரங்களை பழுதுபார்த்தல் அல்லது மீள்கட்டமைப்பு தற்போதைய நிலமைக்கு எற்ற வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br><br>மின் கோபுரங்களில் தற்போது காணப்படும் நிலமைகள் தொடர்பாக ஆய்வு அறிக்கை மற்றும் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக விபரங்கள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ள தேவையான செயற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளகப்பட்டுள்ளதாக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) இனால் முகாமைத்துவ அறிவிக்கப்பட்டது. இதற்காக பொறிமுறை செயற்பாடுகள் மத்திய பொறியியில் ஆலோசனைப் பணியகத்தின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது காணப்படும் நிலமைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்ற செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதன் முக்கியத்துவம் வாய்ந்தது என்று சபையினால் சுட்டிக்காட்டப்பட்டுளளதுடன், விளையாட்டு மைதான புணரழைமப்பு மற்றும் 400 மீற்றூ ஓடுபாதையினை மீள தாபிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் வேளையில் விளையாட்டு விரர்கள் மற்:றும் வீராங்கனைகுளுக்காக சர்வதேச மட்டத்திலான விசதிகளை வழங்குவதற்காக ஏனைய தேவைகளும் தற்போதைய நிலைமைக்கு ஏற்றவாறு வகுப்பது பொருத்தமானதென முகாமைத்துவ சபையினால் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்காக தேவையான எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சபையினால் தீர்மாணிக்கப்பட்டது.<br><br>இச் செயற்திட்டத்திற்காக மொத்த அடிப்படையில் ரூபா 220 மில்லியன் செலவாகும் என எதிர்பார்பதுடன் காணப்படும் மின் கோபுரங்களை பழுதுபார்க்கும் செயற்பாடுகள் தொடர்பில் உத்தேச செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்வது தொடர்பில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடுவதனால், செயற்திட்ட யோசனைகள் நிதி அமைச்சின் தேசிய திட்டமிடல் பிரிவிற்கு அனுப்பட்டுள்ளமையினால் தலைவர் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையினால் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டது. |
| 05 | | நி. ஒ. 135 இன் கீழ் நிதி நிருவாகம் தொடர்பிலான பணிகளை பொறுப்பளித்தல் - 2017 | 2017 ஆண்டிற்காக அகீக்கரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டிற்காக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை உள்ளடக்கி செலவினங்களை மேற்கொளள்ளல் மற்றும் வருமானத்தை சேகரிப்பதை நோக்காக் கொண்டு நிதி ஒழுங்குக் கோவை 135 இற்கமைய நிதி நிருவாகம் தெடர்பில் பணிகளை பொறுப்பளிப்பளித்தல் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் இடைக்கிடையே நிதி அமைச்சின் மூலம் வழங்கப்படும் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் கீழ் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேணடும் என முகாமைத்துவ சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டது.<br><br>இதே வேளை பொ.நிரு.சு 03/2015 இற்கமைய அமுலில் உள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | செயற்பாட்டு இடை கட்டுநிதி தொடர்பில் அமுல்படுத்துவதற்கும் முன்னெடுக்கப்படும் பராமரிப்பு செயற்பாடுகள் மற்றும் அதற்கமைய அழைத்து சமர்பிக்கப்படும் விலை மனு படிவம் 03 அல்லது அதனை விட கூடுதலாக எண்ணிக்கை இருக்க வேண்டுமென்றும் சரியாக சமர்பிக்கப்பட வேண்டும் என்றும் முகாமைத்துவ சபையினால் அறிவிக்கப்பட்டது. |
| 06 | | 2017வசந்த காலத்திற்காக நுவரெலியா குதிரைப் பந்தய போட்டி மைதானத்தை குத்தகைக்கு வழங்குதல் | 2017 வசந்த காலத்திற்காக நுவரெலியா குதிரைப்பந்தய போட்டி மைதானத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பகுதி தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் ஒரு மாத காலத்திற்காக (2017 ஏப்ரல் மாதம் 01 திகதி தொடக்கம் 30 வரை) இற்காக நுவரெலியா நகர சபைக்கு ரூபா 1,100,000/= (குத்தகையுடன்) வழங்க முகாமைத்துவ சபையினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.<br>(அ) குதிரைப்பந்தய மைதானத்தின் நுழைவாயிலுக்கு அருகாமையில் உள்ள பகுதி<br>(ஆ) காமினி வித்தியாலத்திற்கு முன்னால் உள்ள பகுதி<br>(இ) இலங்கை மின்சார சபையிற்கு முன்னால் உள்ள பகுதி |
| 07 | | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் மீள புணரமைக்கப்படும் கால்பந்து/ரக்பி விளையாட்டு மைதானத்தை பராமரித்து பேணுவதற்காக ஆலோசனை/தள உத்தியோகத்தரின் சேவையைப் பெற்றுக் கொள்ளல். | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதாகத்தின் காற்பந்து/ரகர் விளையாட்டு மைதானத்தை புணரமைக்கும் செயற்திட்டத்திற்குரியதான ஆலோசனை சேவைக்குரிய உடன்படிக்கை இவ் அதிகார சபை மற்றும் பொறியில் பணிகள் தொடர்பான மத்திய பணியகத்திற்கு இடையில் மேற்கொள்னப்படுவதுடன்,செயற்திட்டத்தின் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இவ் உடன்படிக்கைக் கால எல்லையும் நிறைவடைந்துள்ளது செயற்திட்ட கால எல்லை நிறைவடைந்த போதிலும் விளையாட்டு மைதானத்தை பேணுவதற்காக பராமரிப்புப் பணிகள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படவேண்டும்.<br><br>எனவே மீண்டும் புணரமைகக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தை சிறந்த முறையில் முன்னெடுகப்பதற்காக தகமை கொண்ட ஆலோசனைகர் தள நிர்வாகியின் சேவையைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியம் என அறிவிப்பதுடன் அதற்காக பொருத்தமான ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக பொறுகை செயற்பாடுகள் பின்பற்றப்படுவதன் மூலம் மேற்கொள்வதற்கு உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்ப) இனால் யோசனை தெரிவிக்கப்பட்டது..<br><br>இதற்கமைய பெறுகை செயற்பாடுகளைப் பின்பற்றி பொருந்தமான நிறுவன/தனிநபரின் சேவையைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் உரிய ஆலோசனை சேவையை 06 மாத கால மாதாந்த ஒப்பந்த அடிப்படைக்கு அமைய பெற்றுக் கொள்வதற்குகும் முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>பொறியில் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப்பணியகத்துடன் தற்போது செய்து கொண்டுள்ள உடன்படிக்கை மற்றும் உடன்படிக்கைக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புப் பணிகளுக்காக இந்நிறுவனத்தினால் எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் இருப்பின் அது தொடர்பாக கண்டறிய நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதென முகாமைத்துவ சபை சுட்டிக் காட்டிக் காட்டுவதுடன் கணிசமான மூலதன நிதியை செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட இச்செயற்திட்டத்தின் பணிகளை உரியவாறு முன்னெடுத்துச் செல்வது கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும் என்றும் முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டது..<br><br>எனவே இதமற்காக தகைமை கொண்ட உத்தியோகத்தர் ஒருவரை சேர்த்துக் கொள்ள தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் முகாமைத்துவ சபை உதவிப்பணிப்பாளர் (நிருவாகம்) இற்கு ஆலோசனைகள் வழங்கியதுடன்,அதிகார சபையின் ஊழிய கட்டமைப்பில் இப்பதவியினரை உருவாக்குவதற்கும் ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளை வகுத்து உரிய பதவியின் தேவைகள் தொடர்பில் முகாமைத்துவ சேவை திணைக்களத்தை அறிவுறுத்துமாறு முகாமைத்துவ சபையினால் மேலும் அறிவிக்கப்பட்டது. அத்துடன் காற்பந்து/ரக்பி/விளையாட்டு மைதானத்தின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக செயற்பாட்டுத் திட்டத்தை வகுத்து ஆலோசனை நிறுவனத்திற்கு அல்லது தனி நபருக்கு வழங்குவதற்கும் அதற்கமைய எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மற்றும் அச்சபை பணிகளையும் பணிப்பாளர் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கும் முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டது. |

<table>
<tr><td>08</td><td></td><td>வரவு செலவு மதிப்பீடு</td><td>நிதி அமைச்சினால் 2017 ம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு எல்லையின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கு உள்ள செலவின மதிபபீடுகள் மற்றும் செலவினம் தொடர்பில் கீழி குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்ளக் முகாமைத்துவ சபைக்கு சமர்பிக்கப்பட்டது.<br><br>முகாமைத்துவ சபை அது தொடர்பில் கலந்துரையாடியதுடன் அதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>(அ) மீண்டெழும் செலவினம்<br>(ஆ) பிரதான பெறுகை செலவினம்<br>(இ) செயற்பாட்டுத் திட்டம்<br><br>2017ம் ஆண்டிற்காக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து செயற்திட்டங்களின் மூலதன ஒதுக்கீடுகள் கிடைக்காத பட்சத்திலும் அனைத்து அடிப்படைப் பணிகளையும் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு முகாமைத்துவ சபை உரிய பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>09</td><td></td><td>பதவிகளுக்காக சேர்த்துக் கொள்ளல்-சட்ட உத்தியோகத்தர்,நிருவாக உத்தியோகத்தர் மற்றும் கணக்கு உத்தியோகத்தர்</td><td>அதிகார சபையின் நிருவாக செயற்பாடுகளை கிரமமாக முன்னெடுப்பதற்காக மற்றும் இலகுபடுத்துவதற்காக ஊழியர் கட்டமைப்பு சமீபத்தில் உள்ளடக்கி முனடனெடுக்கப்படும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உத்தேச பணியாளர் சபைக்காக சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவ் உத்தியோகத்தர்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>
<table>
<tr><th colspan="2">பெயர் மற்றும் முகவரி</th><th>பதவி</th><th>தே.அ.இல க்கம்</th><th>பெற் றுக் கொ ண்ட புள்ளி</th><th>சேர்த்துக் கொள்ளப் பட்ட திகதி</th></tr>
<tr><td>1</td><td>திரு.கபில முணசிங்க இல 444/11/2, இரண்டாவது ஒழுங்கு விஹார மாவத்தை கடுவெலை</td><td>சட்ட உத்தியோகத்தர்</td><td>750852521V</td><td>69</td><td>2016-12-05</td></tr>
<tr><td>2</td><td>திருமதி.எச் அனோஜா பிரிய தர்சினி இல 2/33/24, கொஸ்பலன்வத்த சுவராபொல, பிலியன்தளை</td><td>நிருவாக உத்தியோகத்தர்</td><td>736480069V</td><td>59</td><td>2017-01-16</td></tr>
<tr><td>3</td><td>டப்ளிவ்எம்பி எஸ் பண்டார பியதாச இல 103/33ஏ தர்மராஜ,மாவத்தை கண்டி.</td><td>கணக்கு உத்தியோகத்தர்</td><td>803565546V</td><td>54</td><td>2017-03-13</td></tr>
</table>
<br>மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ள முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>10</td><td></td><td>சுகததாச விளையாட்டு ஹோட்டலுக்காக மனைப் பொருட்களை கொள்வனவு செய்தல்</td><td>சுகததாச விளையாட்டு ஹோட்டலின் புணரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் ஆகஸட் மாதத்தில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விளையாட்டு ஹோட்டலின் தற்போது காணப்படும் அனைத்து மனைப் பொருட்களும் சேதமடைந்து இருப்பதனால் புதிய மனைப் பொருட்களை கொள்வனவு செய்வது அவசியம் என்பதுடன் அதற்காக செலவாகும் நிதி 50 மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உரிய மதீப்பீடு செய்யப்பட்ட நிதி இவ் ஆண்டில் மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்படவில்லை என்பதனால் இலத்திரணியல் கால கணிப்பீட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 150 மில்லியன், ஒதுக்கீடு மனைப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>இலத்திரணியல் கால கணிப்பீடு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்பட்ட போதிலும் பொருத்தமான</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | விநியோகத்தர்களை தேர்ந்தெடுக்க முடியாமையினால் மீள சர்வதேச விநியோகத்தர் நிறுவனத்தினால் விலைமனுக்களை கோர அமைச்சின் பெறுகை குழுவினால் தீர்மாணிக்கப்பட்டது.<br><br>எனவே இலத்திரணியல் கால கணிப்பீட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஓதுக்கீடுகளில் ரூபா 50 மில்லியன் நித சுகததாச விளையாட்டு ஹோட்டலின் மனைப் பொருள் கொள்வனவிற்காக பயன்படுத்த முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அத்துடன் ஒரு சில செயற்திட்டங்களின் பிரிவுகளாக பணிகளை பூர்த்தி செய்யும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம் என்று ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்திட்டம் அல்லது முழுமையாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது என்றும் அறிவிக்கப்பட்டது. பெறுகை செயற்பாடுகளில் ஏனைய செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள முடியுமா என்பது தொடர்பில் கண்டறியுமாறு முகாமைத்துவ சபையினால் அறிவிக்கப்பட்டது. |
| 11 | | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் நிர்மானிக்கப்பட்டுள்ள 8 பீ வர்த்தக கட்டிடம் மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குதல் | இவ்வர்த்தக கட்டிடத் தொகுதியை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக பல தடவைகள் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும் அவ்வர்த்தக நிலையங்களை மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்க முடியாது என்பதனால் பெறுகைக் குழுவின் இணக்கத்திற்கு அமைய பகிரங்க இடங்களில் விளம்பரங்களை ஒட்டி விலைமனுக்கள் கோரப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் ஒருவர் மாத்திரம் முன் வந்தததுடன் பின்னர் அவரும் வர்த்தக நிலையத்தைப் பெற்றுக் கொள்ள நிராகரித்தார்.<br><br>8 பீ வர்த்தக கட்டிடத் தொகுதி கே.எம்.கே.அப்பில் சரக்குப் பொருள் கொண்டு செல்லும் (JMJ Cargo Transport) ஆகிய நிறுவனத்தினால் மாதாந்த வாடகை நிதி (ரூபா 40,000/= (வரியின்றி) மற்றும் மீள செலுத்தப்படும் பாதுகாப்பு வைப்பு நிதியாக 06 மாதகால வாடகை நிதியினை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எமது அதிகார சபையினால் சமர்பிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச கேள்வி மனு விலை ரூபா 40,000/= (வரியின்றி) ஆகும்.<br><br>ரூபா 40,000/= (வரியின்றி) மாதாந்த வாடகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு கே.எம்.கே. (JMJ Cargo Transport) இற்கு குத்தகைக்கு வழங்க முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>இம் முகாமைத்துவ சபை பத்திரத்தில் வர்ததக கடைத்தொகுதியின் அளவு குறிப்பிடப்படாமை குறைபாடு என முகாமைத்துவ சபையினால் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே எதிர்காலத்தில் முகமைத்துவ சபை பத்திரத்தை சமர்பிக்கும் போது தேவையான அனைத்து புள்ளிவிபரங்களையும் உள்ளடக்குவது முக்கியத்துவம் வாய்ந்தது எனக் குறிப்பிடப்பட்டது. |
| 12 | | ஆதர் டி சில்வா மாவத்தைக்கு முன்னால் உள்ள வர்த்தக வளாகத்தை மீள குத்தகை அடிப்படையில் வழங்கதல் | ஆதர் டி சில்வா மாவத்தைக்கு முன்னால் உள்ள வர்த்தக நிலைய வளாகம் Tata Tailoring நிறுவனத்தற்கு ஒரு வருட காலத்தற்கு மாதாந்தம் ரூபா 105,000.00 நிதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் குத்தகைக் கால எல்லை 2017.04.30 ஆம் திகதி நிறைவடையும். அந்நிறுவனத்தினால் மீள இவ்வர்த்தக வளாகத்திற்கு ரூபா 3,000.00 கூடுதலாக செலத்துவதற்கு அதாவது மாதாந்தம் ரூபா 108,000.00 (குத்தகை இன்றி) ஒரு வருட காலத்திற்கு நீடிப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.<br><br>சுகததாச திறந்து விளையாட்டு மைதான கடைத் தொகுதியைப போன்று இரு மடங்கு சதுர அளவு இவ்வ வர்த்தக நிலையத்தில் இருப்பதனால் முகாமைத்துவ சபையினால் தீர்மாணிக்கப்பட்டதுடன் எதிர்வரும் ஆண்டு காலத்திற்காக மாதாந்தம் ரூபா 108,000 நிதி (வரி இன்றி) ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்க முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 13 | | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை குத்தகை அடிப்படையில் வழங்கல் | 02 வர்த்தக நிலையங்கள் இயன் மருத்துவ நிலையத்தை தடாத்தி செல்வதற்காக மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குமாறு வி.ரி.லோகராஜா அவர்களினால் கோரிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும் முகாமைத்துவ சபை பத்திரத்தில் உள்ளடக்க வேண்டிய கீழ் குறிப்பிடப்பட்ட பிரதான புள்ளி விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாமையினால் முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.<br><br>வர்த்தக நிலையங்களின் சதுர அடி அளவு சமர்பிக்கப்பட்டுள்ள மாதாந்த வாடகை நிதி பாதுகாப்பு வைப்பு நிதியைப் பேனுசதற்கு எதிர்பார்க்கும் வர்த்தகத்தின் பதிவு மற்றும் தேவையான ஏனைய அங்கீகாரங்கள் உட்பட அவர்களினால் ஏதேனும் நவீனமயப்படுத்தல்கள் மேற்கொள்வதாயின் அது தொடர்பான விபரங்கள் போன்றவற்றை உள்ளடக்கி முகாமைத்துவ சபைக்கு சமர்பிக்குமாறு கொள்வனவு/சந்தைப்படுத்தும் உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 14 | | இலத்திரணியல் கால கணிப்பீட்டு கொள்வனவு செய்தல் | இலத்திரணியல் கால கணிப்பீட்டு உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக இரட்டை உறை முறையின் கீழ் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இரு கேள்விதாரர்களினால் தொழில் நுட்ப மற்றும் நிதி யோசனைகள் கையளிக்கப்பட்டுள்ளது. தகைமைகளை பூர்த்தி செய்த ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம் நிதி யோசனை திறக்கப்பட்டதடன் ரூபா 205 மில்லியன் நிதிக்குரிய ரூபா 205 மில்லியன் நிதிக்கு உரிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு யோசனை சமர்பிக்கப்பட்டது.<br><br>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய நேரக் கணிப்பீட்டு உபகரணங்களில் மைதான நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களைத் தவிர எஞ்சிய உபகரணங்கள் ரூபா 135 மில்லியனுக்கு கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய ரூபா 100 மில்லியனை விட கூடுதலான பெறுகை செயற்பாடு என்பதனால் அமைச்சின் பெறுகைக் குழுவிற்கு தேவையான அறிக்கையினை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.இறுதியல் அமைச்சின் பெறுகைக் குழுவினால் கேள்வி இரத்து செய்து மீண்டும் சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகரமான விலை மனுக்கோரரின் கீழ் விளையாட்டுத் துறை அமைச்சினால் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>இவ்வாறு விலை மனுக்கோரலை மேற்கொள்ள திட்டமிட்ட போதிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிதிப் பெறுகை ரூபா 150 மில்லியன் என்பதனால் அந்நிதி போதியளவு அமையுமா/ இல்லையா என்பதற்கான காரணத்திற்கு அமைய மீண்டும் கொள்வனவு செய்வது பிரச்சனைக்குரியதாகும் அத்துடன் பெறுகை பணிகளுக்காக 05 மாதங்களை விட மேற்பட்ட கால கடக்கும் என்றும், உபகரணம் உற்பத்தியின் பின்னர் மேற்கொள்வதனால் இவ் ஆண்டிற்குள் இவ் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக இயலுமை இல்லை என மேற்பார்வை செய்யப்பட்டது.<br><br>எனவே 2017 ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூபா 50 மில்லியன் எந்தவொரு பணிக்காகவும் பயன்படுத்தாத பட்சத்தில் மீள திறைசேரியினால் பெற்றுக் கொள்வதனால் அந்நிதியை பயன்படுத்த சுகததாச விளையாட்டு ஹோட்டலுக்கு மனைப் பொருட்களைக் கொள்வனவு செய்ய யோசனை தெரிவிக்கப்பட்டது.<br><br>இதன் போது முகாமைத்துவ சபையினால் இலத்திரணியல் நேரக் கணிப்பீட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதை தாமதப்படுத்துவது தொடர்பில் கடுமையான அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. மெய் வல்லுனர் விளையாட்டுத்துறைக்கு பிரதான அதிதியாவசியப் பிரிவான இவ் உபகரணங்களை கொள்வனவு கட்டாயமாக மேற்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டதுடன் இவ் உபகரணங்கள் இன்றி விளையாட்டு வீரர் ஒருவரினால் சாதனை அங்கீகரிக்கப்படுவதில்லை என அறிவிக்கப்பட்டது.<br><br>நிதி ஒதுக்கீடுகள் போதியளவு இல்லாதிருப்பின் ஒட்டப்போட்டிகளுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள்கள், மைதான நிகழ்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் நீச்சல் தடாகத்திற்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள்கள் தனித்தனியாக கொள்வனவு செய்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டதுடன், இதற்காக முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>2016ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட விசேட நிதி ஒதுக்கீட்டில் ரூபா 100 மில்லியன் இருப்பதாகவும் அந்நிதியினை பயன்படுத்தி மெய்வல்லுனர் விளைபாட்டு மற்றும் நீச்சல் போட்டிகளுக்காக தேவையான நேரக் |

| | | | |
|---|---|---|---|
| | | | கணிப்பீட்டு உபகரணங்களில் ஒரு பகுதியையேனும் கொள்வனவு செய்வதற்கு தேவையான எதிர்கால செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தலைவர் . சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டது. |
| 15 | | செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்காக நியமித்தல் | மறுசீரமைக்கப்பட்ட அதிகாரசபை சட்டம் சட்டமாதிபர் திணைக்களத்தினால் அரசியல் யாப்பிற்கு அமைவானது என்று உறுதிபடுத்தப்பட்ட போதிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறப்றுக் கொள்ள இருப்பதனால் இவ் அதிகாரசபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்காக **திரு. ஆலோக ஸ்ரீ காந்த** அவர்களை நியமிக்க முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. |
| 16 | 2017 ஒக்டோபர் | திறந்தவெளி மைதானத்தில் தாபிக்கப்பட்டுள்ள பால் விற்பனை நிலையத்தின் வாடகைக்காக மாதாந்த வாடகை நிதி மறுசீரமைப்பு மற்றும் புதிய சேவை உடன்படிக்கை தொடர்பாக | 2008 ம் ஆண்டில் சுகததாச திறந்தவெளி விளையாட்டு மைதானத்தில தாபிக்கப்பட்டுள்ள பால் விற்பனை நிலையத்தின் மாதாந்த வாடகை நிதி ரூபா 3,000/= (வரியுடன்) என இதுவரை செலுத்தப்படுவதுடன் நீர்/மின் நுகர்விற்காக இந்நிறுவனத்தினால் உரிய மாதாந்த வாடகை நிதி செலுத்தப்படுகின்றது. 2008 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னெடுக்கப்படும் பால் விற்பனை நிலையத்தின் மாதாந்த கட்டளை மறுசீரமைப்பு மேற்கொள்ள யோசனை தெரிவிக்கப்பட்டபோதிலும் அம்மறுசீரமைப்பு மாதாந்த வாடகை நிதியின் பெறுமதி தொடர்பில் முகாமைத்துவ சபை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இணங்குவதில்லை என அறிவிக்கப்பட்டது.<br><br>(i) 2008ம் ஆண்டில் இப்பால் விற்பகை நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2017ம் ஆண்டு வரை மாதாந்த வாடகையில் எதுவித அதிகரிப்பம் ஏற்படவில்லை.<br>(ii) ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ரூபா500/= போனிற சிறு நிதி மூலம் மாதாந்த வாடகையை மறுசீரமைத்தல்.<br>(iii) நிலத்தின் பெறுமதிக்கு அடைய மாதாந்த வாடகைப் பெறுமதி திர்மானிககப்படாமை<br>(iv) இப்பால் விற்கனை நிலையம் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் அன்றி இந்நிறுவனத்தின் பட்டய முகவரினால் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br><br>அத்துடன் கொழும்பைச் சுழ மற்றும் புகையிரத நிலையங்களில் இவவ்வாறான பால் விற்பனை நிலையங்கள் நடாத்தப்படுவதனால் அவ்விங்களின் மாதாந்த வாடகை நிதி எவ்வளவு என்பது தொடர்பில் கண்டறிந்து எமது அதிகார சபையினால் பேணப்படும் மாதாந்த வாடகை நிதி தொடர்பில் ஏதேனும் தீர்மானத்தை எட்ட முடியும் என்பதனால் அது தொடர்பில் கண்டறியுமாறு முகாமைத்துவ சபையினால் நிருவாக உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>இப்பால் விற்பனை நிலையங்களில் காணப்படும் நிலப்பரப்பு அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தற்போது காணப்படும் குறைந்தப்பட்ச மதிப்பீட்டு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வாடகை நிதியை மறுசீரமைப்பதற்கு தேவையான எஞ்சிய செயற்பாடுகளை மேற்கொள்ள முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| 17 | | சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் வருமானத்திற்காக தனியான கணக்கைப் பேணல் | 3002239 இலக்கம் கொண்ட இலங்கை வங்கி கிராண்ட் பாஸ் கிளையில் முன்னெடுக்கப்படும் இவ் அதிகாரசபையின் நடைமுறைக் கணக்கு செயற்திட்ட நிதி, வருமானம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்படும் அனைத்து நிதியும் காணப்படுவதனால் முகாமைத்துவப் பிரச்சனைகள் ஏற்படுவதாக உதவிப்பணிப்பாளர் (நிதி) மூலம் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டது. ஒரு கணக்கினை பேணும் போது பிரச்சனைகள் எழுவதாக அறிவிக்கப்பட்டுள்ளமையினால் மேலும் புதிய கணக்கை ஆரம்பித்து பேணுவது கட்டிடத் தொகுதியைப் போன்று பிரச்சனைக்குரிய நிலைமைகள் அதிகரிப்பதாக முகாமைத்துவ வபையினால் தெளிவுபடுத்தப்பட்டது.<br><br>நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தை தொடர்ந்து இவ்வதிகாரசபையின் கணக்கு செயற்பாடுகள் தொடர்பான பணியின் போது உரிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் மூலம் மற்றும் ஊழிய சிரமத்தை குறைவாக ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டமையினால் கொடுங்கல் வாங்கல்கள் உடனடியாக கணக்கு செயற்பாடுகள் சமகாலப்படுத்தப்படுவதனால் தேவையான சரியான தகவல்களை இச் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்ள முடிகின்றயமையினால் வங்கியில் (E-Banking System) இற்காக ஈடுபடுவது முக்கியமானதொரு முகாமைத்துவ சபையினால் சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>அத்துடன் நிதி அமைச்சினால் நிதி கிடைகின்ற மற்றும் அனைத்தும் அமைச்சுக்கள்/திணைக்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை மேற்காள்வதற்காக முன்னெடுக்கப்படுவது ஒரு கணக்கு மூலம் என முகாமைத்துவ சபையினால் உதவிப்பணிப்பாளர் (நிதி) இற்கு அறிவிக்கப்பட்டது. வருமானத்தை பேணுவதற்காக தனியான கணக்கை ஆரம்பித்து முன்னெடுப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | முகாமைத்துவ சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| 18 | | மக்கள் வங்கியின் கிராண்ட்பாஸ் கிளையின் சிறிய வங்கி அலகு சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி அதிகார சபைக்குள் தாபித்தல் மற்றும் இவ்வதிகார சபையின் வருமானத்திற்காக தனியான கணக்கை பேணல் | சுகததாச உள்ளக மற்றும் திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தை வேறுபடுத்துவதற்காக அதனைப் போன்று விளையாட்டு செயற்பாடுகளுக்காக நாளாந்தம் கூடுதலானோர் வருகை தருவதனால் அவர்களின் வங்கி செயற்பாடுகளுக்காக வங்கிக் கிளையின் தேவைகள் அதிகரித்துக் காணப்படுவதனால் அதிகாரசபைக்கு அண்மையில் அமைந்துள்ள வங்கியான மக்கள் வங்கியினால் யோசனை சமர்பிக்கப்பட்டுள்ளதாக உதவிப்பணிப்பாளர் (நிதி) இனால் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>இவ் வங்கிப் பிரிவிற்கு வெளியில் இருந்து வருபவர்களும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு தடைகள் ஏற்படாத வகையில் பொருத்தமான முறையில் அமைத்து வழங்க நடவடிக்கை எடுத்தல், உரிய வங்கியுடன் வர்த்தக உடன்படிக்கையை தயாரித்து பொருளாதார பெறுமதி கொண்ட வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் யோசனை சமர்பித்தல் மற்றும் நிறுவனத்தின் மூலம் 10 ஆண்டுகளுக்காக மூல உபாயத்திட்டம் (stratage plan) வகுத்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் முகாமைத்துவ சபையினால் சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>எந்தவொரு அரச வங்கி மூலம் யோசனை பெற்றுக் கொள்ள மற்றும் அவ்வங்கிக்கிளையை நிர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பை அறிமுகப்படுத்தல் மற்றும் உரிய வங்கிகளினால் அவர்களின் அபிவிருத்தித் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். வங்கியை நிர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பை அறிமுகப்படுத்தல் மற்றும் உரிய வங்கிக் கிளையினால் அவர்களின் அபிவிருத்தி திட்டங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். வங்கியை நிர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு வர்த்தக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டு ஹோட்டலுக்கு அண்மையில் நிர்மானிக்க முடியுமா என்பது தொடர்பில் கண்டறிதல் மற்றும் வெளி நபர்களுக்கு பிரச்சனைகள் இன்றி தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு பிரவேசிக்க முடியுமான இடமாக இருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என முகாமைத்துவ சபையினால் அறிவிக்கப்பட்டது. இதற்காக குத்தகை உடன்படிக்கை மற்றும் கட்டமைப்புத் திட்டங்களை வகுத்து ஏனைய அனைத்து யோசனைகளையும் உள்ளடக்கி அறிக்கை தயாரித்து முகாமைத்துவ சபைக்கு சமர்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.<br>உகந்த வங்கிப் பிரிவினை நிர்மானிப்பது தொடர்பில் கருத்துக்கள்/யோசனைகளை தாக்கல் செய்து அது தொடர்பாக சிந்தனை ரீதியிலான திட்டம் (Conceptual Plan) முகாமைத்துவ சபைக்கு சமர்பித்து உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டது.<br><br>அத்துடன் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையினால் நடாத்தப்படும் பாரியளவு நிகழ்ச்சிகளுக்காக (Mega Events) நிதி அறவிடும் முறையினை பின்பற்றுவது பொருத்தமானது என்றும் முகாமைத்துவ சபையினால் உதவிப்பணிப்பாளர் (நிதி) இற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.<br><br>வருமானத்திற்காக தனியான கணக்கை முன்னெடுப்பதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. |
| 19 | | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் ஆலோசனை/தள நிருவாகி உத்தியோகத்தர்களின் சேவைகளின் காலத்தை நீடித்தல் (ஒப்பந்த அடிப்படையில்) | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் ஆலோசனை/தள நிருவாகி உத்தியோகத்தர் திரு.கே.ரி.நுகவெல அவர்களின் சேவைக்காலப் 2017.09.30ம் திகதி நிறைவடைவதனால் சேவையின் தேவைக்கமைய மற்றும் அவருக்குப் பொறுப்பளிக்கப்பட்ட அனைத்து கடமைகளையும் உரியவாறு மேற்கொள்வதனால் அவரின் சேவைக்காலத்தை மீள நீடிப்பது பொருத்தமானதென சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>திரு. கே.ரி.நுகவெல அவர்கள் 60 வயதை பூர்த்தி செய்தமையினால் சேவை நீடிப்பை வழங்க அங்கீகாரத்தை வழங்க முடியாது என்று முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டது.இருப்பினும் 40 மீற்றர் ஓடு பாதையை மீள அமைப்பதற்கான பணிகள் பூர்த்தியடையாமையினால் அச்செயற்பாடுகள் நிறைவடையும் வரை விளையாட்டு மைதானத்தையும் இவ்வாறு பேணுவதற்காக தள நிருவாக உத்தியோகத்தரின் சேவையினைப் பெற்றுக் கொள்வது பொருத்தமானது என்றும், கணிசமான மூலதன நிதியை செலவிட்டு புணரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள இக் கால்பந்து விளையாட்டு மைதானம் உரிய தரத்திற்கு அமைய பராமரித்து பேணுவது தேசிய பணி என்பதனால் தள நிருவாக/ உதவி தள நிருவாகப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் மாதாந்த முன்னேற்றங்களை மேற்பார்வை செய்யும் செயற்பாடுகளை மேற்கொண்டு மீள 03 மாத காலத்திற்காக சேவை நீடிப்பினை வழங்க முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>அத்துடன் தள நிருவாக / துணை தள நிருவாக பதவிகளுக்காக சேர்த்துக் கொள்வதற்காக தேவையான அங்கீகாரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் துரித கதியில் பெற்றுக்கொள்ள தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நிருவாகப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.<br><br>திரு. கே.ரி.நுகவெல அவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்க வேண்டிய எவ்வளவு காலத்திற்காக என்பதனை முகாமைத்துவ சபையினால் உரிய படிவத்தில் உள்ளடக்கப்படாமை பாரிய குறைபாடு என முகாமைத்துவ சபையினால் அறிவிக்கப்பட்டதுடன், இதற்குப் பின்னர் முகாமைத்துவ சபை படிவத்தை சமர்பிக்கும் போது அங்கீகாரத்தை எதிர்பார்க்கும் விடயங்களுக்காக தேவையான சகல புள்ளி விபரங்களையும் உள்ளடக்கி சமர்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் திரு. கே.ரி.நுகவெல அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அதி உயரியது என்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதன் மூலம் மெய்வலலுனர் விளையாட்டுத்துறையின் முன்னேற்றங்கள் இடம் பெறுவதனால் அவர்களின் சேவையை கட்டாயமாக வினையாட்டுத்துறை அமைச்சிற்கு கிடைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டது.<br><br>திரு. கே.ரி.நுகவெல அவர்களின் சேவை விளையாட்டு மைதான பராமரிப்பு மற்றும் பேணுவதற்காக எதிர்காலங்களிலும் அவசியமாயின் சேவையின் தேவையைக் குறிப்பிட்டு பாராளுமன்றத்திற்கு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதென முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டது. |

## 2017 ஆம் ஆண்டுக்காக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையின் கணக்காய்வுப் பணிகள்

2017 கணக்காய்வு ஆண்டுக்காக 15 கணக்காய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பதில்களைத் தயாரிக்க அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழுவினால் அவ் ஆண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் 02 தடவைகள் நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கமைய,

01. உள்ளகக் கணக்காய்விற்காக 2017 ஆம் ஆண்டுக்குரியதாக பதிலளிக்கப் பட்டுள்ளதுடன் அவை அமுல்படுத்தப்பட்டுள்ளன.

02. 2017 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு எண்ணிக்கை 08 ஆகும்.

03. விளையாட்டுத் துறை அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் 04 கூட்டங்களுக்காக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

# பொருள் ஆய்வு

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டுக்குரிய பொருள் ஆய்விற்காக 2017.12.08 ஆம் திகதி 10 உப குழுக்களைக் கொண்ட பொருள் ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. அரச நிதி ஒழுங்கு கோவை 756, 757 ஒழுங்கு விதிகளுக்கமைய பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பொருள் வெளியேற்றும் பணிகள் இடம்பெறுகின்றன.

## வருடாந்தப் பெறுகை

2017 நிதியாண்டுக்குள் அதிகார சபையின் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைச் செயற்பாடுகள் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றன.

| தொ. இல | பெறுகை | நிதி ரூபா. |
|---|---|---|
| | **சுகததாச உள்ளக விளையாட்டுத் திடல்** | |
| 01 | பிரதான விளையாட்டுத் திடலின் சிவிலிம் புணரமைப்பு. | 35,000,000.00 |
| 02 | விளையாட்டு ஹோட்டல் நவீனமயப்படுத்தல் - இறுதிக் கட்டம் | 100,000,000.00 |
| 03 | விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 15,000,000.00 |
| 04 | கணனி மற்றும் உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்தல். | 10,000,000.00 |
| 05 | அனைத்து மலசல கூடங்கள் மற்றும் குளியல் அறைகளை புணரமைத்தல். | 44,000,000.00 |
| 06 | இலத்திரணியல் நேரக் கணிப்பீட்டு முறைமையினைத் தாபித்தல். | 50,000,000.00 |
| | **சுகததாச திறந்த வெளி விளையாட்டுத் திடல்** | |
| 07 | தலைவர் பங்களாவை புணரமைத்தல் | 10,000,000.00 |
| 08 | பொருத்துதல் - புதிய நிருவாகக் கட்டிடம் | 10,000,000.00 |
| 09 | ரக்பி/காற்பந்து விளையாட்டு மைதானத்திற்காக உபகரணங்களை கொள்வனவு செய்தல். | 20,000,000.00 |
| 10 | சிறறூழியர்களுக்காக தங்மிட கட்டிடத்தை நிர்மாணித்தல் | 57,000,000.00 |
| 11 | நிருவாக கட்டிடத்தை நிர்மாணித்தல் - கட்டம் 111 (B) | 31,000,000.00 |
| 12 | 400 மீற்றர் மற்றும் 200 மீற்றர் செயற்கை ஓடுபாதையை மீள தாபித்தல் | 300,000,000.00 |
| | **போகம்பர விளையாட்டு மைதானம்** | |
| 13 | பிரதான வாயிலை தாபித்தல் | 13,000,000.00 |
| 14 | நிருவாக கட்டிடத்தை நிதமாணித்தல் | 55,000,000.00 |
| | **முழு மொத்தம்** | **750,000,000.00** |

## சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கு

சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன.

- உள்ளக விளையாட்டு அரங்கு
- உப விளையாட்டு அரங்கு (வெட்மின்டன், ஸ்கொஸ் மற்றும் மேசைப்பந்து)
- நீச்சல் தடாக கட்டடத் தொகுதி
- உடற்பயிற்சி மத்திய நிலையம்
- விளையாட்டு ஹோட்டல்



2017 கிராம சக்தி மக்கள் திட்டம்



2017 தேசிய ஜிம்னாஸ்டிக் போட்டி

## உள்ளக விளையாட்டு அரங்கு

உள்ளக விளையாட்டு அரங்கு 5004 ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட பார்வையாளர் அரங்கைக் கொண்டுள்ளதுடன் இங்கு உள்ளக விளையாட்டு மைதானத்தின் அகலம் 35 மீற்றர் மற்றும் நீளம் 40 மீற்றர் ஆகும். இவ்விளையாட்டு அரங்கில் கூடைப்பந்து, வெட்மின்டன், வலைப்பந்து, ஜூடோ, ஜிம்னாஸ்ரிக், கரப்பந்து, மேசைப்பந்து, குத்துச்சண்டை, கராத்தே, மல்யுத்தப் போட்டி போன்ற உள்ளக விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட விழாக்கள், சம்மேளனங்கள், இசைக் கச்சேரிகள், அரச விழாக்கள், பரீட்சைகள் மற்றும் பல்வேறுபட்ட செயலமர்வுகளுக்காகவும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

கிராம சக்தி மக்கள் திட்டத்தின் அங்குரார்பன விழா தேசிய ஜிம்னாஸடிக் போட்டித் தொடர் - 2017, டயலொக் தேசிய கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் - 2017 இவ் ஆண்டில் சுகததாச உள்ளக விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் பிரதான விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டது.

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை உள்ளக விளையாட்டரங்கின் மூலம் ரூபா 34,939,979.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது





**2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டி / போட்டித் தொடர் மற்றும் ஏனைய விளையாட்டுக்கள் தொடர்பாக சுருக்கம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.**

| தொ. இல | செயற்பாடுகள் | சர்வதேச | தேசிய | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | ஜிம்னாஸ்ரிக் போட்டி | - | 06 | 06 |
| 02 | கரப்பந்தாட்ப் போட்டி | - | 02 | 02 |
| 03 | குத்துசி சண்டைப் போட்டி | - | - | - |
| 04 | கராத்தே போட்டி | 02 | 15 | 17 |
| 05 | மேசைப் பந்துப் போட்டி | - | 01 | 01 |
| 06 | வலைப் பந்துப் போட்டி | - | 01 | 01 |
| 07 | இசைக் கச்சேரி (மெகா) | - | 01 | 01 |
| 08 | இசைக் கச்சேரி (வர்த்தகமல்லாத) | - | 01 | 01 |
| 09 | இசைக் கச்சேசரி வர்த்தக | - | 01 | 01 |
| 10 | மேசைப் பந்துப் போட்டி | - | 01 | 01 |
| 11 | வுசு போட்டி | - | - | - |
| 12 | பட்மின்டன் போட்டி | - | 02 | 02 |
| 13 | பரீட்சை/கல்வி வேலைத்திட்டங்கள் | - | 33 | 33 |
| 14 | விருது விழா | - | - | - |
| 15 | சிறுவர் செயற்பாடுகள் | - | 04 | 04 |
| 16 | சம்மேளனங்கள், பரிசளிப்பு விழா | - | 23 | 23 |
| 17 | உடற்பயிர்ச்சிப் போட்டி | - | - | - |
| 18 | டய்கொண்டே போட்டி | - | 01 | 01 |
| 19 | கூட்டங்கள் (நீச்சல் தடாக மண்டபம்) | - | - | - |
| 20 | பயிற்சியளிப்பு | - | 27 | 27 |
| 21 | வர்தக ரீதியிலான படப்பிடிப்பு | - | 01 | 01 |
| **மொத்தம்** | | **02** | **120** | **122** |

# உப விளையாட்டு அரங்கு

இவ் உப விளையாட்டு அரங்கு இரு வெட்மின்டன் விளையாட்டு மைதானங்கள் மற்றும் 04 ஸ்கெஸ் விளையாட்டு மைதானங்களைக் கொண்டமைந்துள்ளதுடன் விளையாட்டுப் போட்டி மற்றும் பயிற்சிப் பணிகளுக்காக வசதிகள் வழங்கப்படுகின்றன.





## நீச்சல் தடாகக் கட்டடத் தொகுதி

நாட்டின் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சகல வசதிகளும் கொண்ட ஒரேயொரு நீச்சல் தடாக கட்டடத் தொகுதி இவ் அதிகார சபையில் இருப்பதுடன் அது கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன.

1. பிரதான நீச்சல் தடாகம்



2. பயிற்சிக்காண துணை நீச்சல் தடாகம்



3. சுழியோடும் தடாகம்



4. சிறுவர் நீச்சல் தடாகம்



இந் நீச்சல் தடாகக் கட்டடத் தொகுதி மூலம் பாடசாலை நீச்சல் போட்டிகளை நடாத்துவது தொடக்கம் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படுவதுடன் பகல்/ இரவுப் போட்டிகளுக்காக அதிசக்தி வாய்ந்த மின் விளக்குக் கோபுரம் கொண்ட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களுக்காக நீச்சல் பாடசாலையும் நடாத்தப்படுவதுடன் இதன் மூலம் மிகுந்த சலுகை விலைக்கு நீச்சல் தடாக வசதிகள் அற்ற மாணவர்களுக்காக மிகுந்த சலுவை அடிப்படையில் வசதிகளை வழங்க பாரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.





SLASU சர்வதேச நீச்சல் போட்டித் தொடர் 2017

2017 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 வரை நீச்சல் தடாகத்தில் இடம்பெற்ற போட்டி / போட்டித் தொடர்கள்.: பயிற்சி மற்றும் பயிற்சி அங்கத்துவம் தொடர்பான சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| | |
|---|---|
| பாடசாலை மாணவர்களுக்காக நீச்சல் அங்கத்துவம் | 662 |
| வயது வந்தோருக்கான நீச்சல் அங்கத்துவம் | 195 |
| நீச்சல் போட்டி | 30 |
| சுழியோடும் போட்டி | |
| நீர்ப்பந்து போட்டி | |
| பயிற்சிகள் | 460 |
| வர்த்தக விளம்பரப் படப்பிடிப்புக்கள் | - |
| தெரிவு செய்வதற்கான போட்டிகள் | 04 |
| **மொத்தம்** | **1351** |

மேற்கூறப்பட்ட போட்டி/ போட்டித் தொடர்கள் / பயிற்சி மற்றும் பயிற்சி அங்கத்துவத்தை வழங்கி பயிற்சித் தடாகங்கள் மூலம் ரூபா. 9,415,651.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## உள்ளக விளையாட்டு திடலின் உடற்பயிற்சி மத்திய நிலையம்



இவ் விளையாட்டுக் கட்டடத் தொகுதி தாபிக்கப்பட்ட யுகம் தொடக்கம் நடாத்தப்படும் உடற்பயிற்சி மத்திய நிலையமாக காணப்படுவதுடன், இம்மத்திய நிலையம் 2013 ஆம் ஆண்டில் நவீனமயப்படுத்தி அதற்காக நவீன உடற்பயிற்சி உபகணரங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

இம் மத்திய நிலையத்தின் மூலம் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளைப் போன்று ஏனைய தரப்பினர்களுக்காகவும் அங்கத்துவத்தைப் பெற்று தேவையான வசதிகள் பெற்றுக்கொள்ள முடியும்.

**2017 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 வரை உடற்பயிற்சி மத்திய நிலையத்தின் மூலம் ரூபா 1,835,939.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.**

## விளையாட்டு ஹோட்டல்

இவ் அதிகாரசபையின் சேவை வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள விளையாட்டு ஹோட்டலின் மூலாரம்பத் தபவல்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் சமகாலப்படுத்தப்பட்ட தகவலகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

இவ் விளையாட்டு விளையாட்டு ஹோட்டல் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் கீழ் நிருவகிக்கப்படுவதடன், இங்கு தங்குமிட வசதிகளுக்காக 42 அறைகளைக் கொண்ட இருமாடிக் கட்டிடம் தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு 150 மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு ஓரே தடவையில் தங்குவதற்காக தங்குமிட வசதிகள் காணப்படுகின்றன. இங்கு தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக திருமண விழாக்கள், கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக தேவையான வசதிகளும் வழங்கப்படுகின்றன.

இவ் விளையாட்டு ஹோட்டல் நீண்டகாலமாக நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படாமையினால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டங்களின் அடிப்படையில் நவீமயப்படுத்தம் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைய முதல் கட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் முழுமையாக சேதமடைந்திருந்த கூரை புணரமைக்கப்பட்டது. 2017 ஆம் அண்டில் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களின் கீழ் புதிய திட்டங்களுக்கு அமைய அரைகளை புணரமைத்தல், உணவகங்களை அமைத்தல் மற்றும் அலங்கார முற்றத்தை உருவாக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நவீனமயப்படுத்தலின் பின்னர் விளையாட்டு ஹோட்டலின் பயண்பாடுகளுக்காக நவீன் மனைப் பொரட்களை கொள்வனவு செய்வதற்கு தேவயான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.






நவீனமயப்படுத்தப்படும் சுகததாச விளையாட்டு ஹோட்டல்.

**சுகததாச உள்ளக விளையாட்டுத் திடல் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் (2017 டிசம்பர் 31 வரை)**

| | பணிகள் | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி (ரூா. மில்) | 2016 ஆம் ஆண்டுக்காக (ரூபா. மில்) | | 2017 ஆம் ஆண்டுக்காக (ரூபா. மில்) | | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கீடு | செலவினம் | ஒதுக்கீடு | செலவினம் | |
| **01** | சுகததாச உள்ளக விளையாட்டுத் திடலின் மலசல கூட தொகுதி மற்றும் குழியல் அறையினை புணரமைத்தல். | 44.00 | - | - | 44.00 | 25.15 | டைல் பதித்தல் மற்றும் நீர் தடுப்பு செயற்பாடுகள் மேற்கொள்ப்படுகின்றன. |
| **02** | விளையாட்டு ஹோட்டலின் புணரமைப்பு செயற்பாடுகள் -கட்டம் 3 | 100.00 | - | - | 100.00 | 63.60 | இறதிக் கட்த்தின் பணிகள். நில அலங்காரம். மின் கம்பிகளை தாபிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| **03** | பிரதான விளையாட்டுத்திடலின் பின்பக்கத்தின் புணரமைப்புப் பணிகள். | 35.00 | - | - | 35.00 | 14.79 | செயற்திட்டப் பணிகள் மேற்கொள்ப்படுகின்றன. |

**சுகததாச உள்ளக விளையாட்டுத் திடலின் 2018 ஆம் ஆண்டுக்கான உத்தேச அபிவிருத்திச் செயற்திட்டங்கள்**

| | செயற்திட்டம் | வரவு செலவு ஒதுக்கீடு 2018 (ரூபா. மில்) |
|---|---|---|
| 01 | பிரதான விளையாட்டுத் திடலின் ஒலிபெருக்கித் தொகுதியை தாபித்தல். | 210.00 |
| 02 | பிரதான விளையாட்டுத் திடலின் ஒளி தொதியை தாபித்தல். | 200.00 |
| 03 | பிரதான விளையாட்டுத் திடலின் குளிரூட்டல் தொகுதியை புணரமைத்தல். | 75.00 |
| 04 | பிரதான விளையாட்டுத் திடலின் சகல புணரமைப்புக்கள் (மலசல கூடத்திற் கு வர்ணம் புசுதல்,கால்வாய் தொகுதி,வைத்திய அரை, மற்றும் நீச்சல் தடாகத்திற்காக நிலையான வலையினை இடல்.) | 100.00 |
| 05 | துணை | 20.00 |
| 06 | பிரதான விளையாட்டுதிடலுக்காக மண்டபத்தை நிர்மாணித்தல் | 50.00 |
| 07 | துணை வழளையாட்டுத் திடலின் புணரமைபபுப் பணிகள் | 10.00 |

## திறந்த வெளி விளையாட்டு அரங்கு

பகல் மற்றும் இரவு நேரங்களில் மெய்வல்லுனர் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தக்கூடிய வகையில் இவ் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளனது. இவ் விளையாட்டு மைதானத்தில் ஒரே தடவையில் 20,000 பார்வையாளர்களுக்கு போட்டியைப் பார்வையிடக்கூடிய வகையில் விளையாட்டரங்கின் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ் விளையாட்டு மைதானத்தில் 400 மீற்றர் மற்றும் 200 மீற்றர் இரண்டு செயற்கை ஓடுபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 03 மாடிகளைக் கொண்ட ஊடகக் கூடம், அதிசக்தி வாய்ந்த மின் ஒளிவிளக்குத் தொகுதிகள் மூலம் இரவு விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்காகத் தேவையான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ் விளையாட்டு மைதானத்தில் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், கரப்பந்தாட்டம், றகர், காற்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்கள் மற்றும் பல்வேறுபட்ட விழாக்களுக்காகவும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

**2017 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதிவரை இவ் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டிகள் மற்றும் விழாக்கள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

| தொ. இல | செயற்பாடுகள் | தேசிய | சர்வதேச | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | உதைப்பந்தாட்ட போட்டி | - | - | - |
| 03 | விளையாட்டு விழாக்கள் (பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி) | - | - | - |
| 04 | விளையாட்டு விழாக்கள் (200 மீற்றர் ஓடுபாதை) | 39 | - | 39 |
| 05 | மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி | - | - | - |
| 06 | றகர் போட்டி | 09 | - | 09 |
| 07 | பயிற்சிகள் | 122 | - | 122 |
| 08 | உடற்பயிற்சிக்காக நடைபாதை அங்கத்துவம் | 82 | - | 82 |
| 09 | வலைப்பந்து போட்டி | 19 | - | 19 |
| 10 | ஏனையவை | 03 | - | 03 |
| **மொத்தம்** | | **274** | **-** | **274** |



**2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டிகள், விழாக்கள், "டி" வாகனத் தரிப்பிடம் குத்தகைக்கூலி மற்றும் ஏனைய வகைகள் மூலம் ரூபா. 17,158,110.63 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.**

**சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் (2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று)**

**(2017-12-31 திகதியன்று)**

| | பணிகள் | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி (ரூா. மில்) | 2016 ஆம் ஆண்டுக்காக (ரூபா. மில்) | | 2017 ஆம் ஆண்டுக்காக (ரூபா. மில்) | | භෞතික ප්‍රගතිය |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கீடு | செலவினம் | ஒதுக்கீடு | செலவினம் | |
| 01 | சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் நிர்வாகக் கட்டடிடத்தின் நிர்மாணிப்பு - கட்டம் 3 (பீ) | 31.00 | - | - | 31.00 | 25.93 | இறுதிக் கட்டத்தில் செயற்திட்டப் பணிகள் மற்றும் அலுவலக ஒதுக்கீட்டுப் பணிகள் முன்னெடுகின்றன |
| 02 | சிற்றூழியர் ஊழியர்களுக்காக தங்குமிட கட்டிட நிர்மாணிப்பு - கட்டம் 1 | 57.00 | - | - | 57.00 | 26.73 | விஷேட கட்டமைப்புப் பணிகள் முனனெடுக்கப்படுகின்றன |
| 03 | 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் செற்கை ஓடுபாதையை மீள அமைத்தல் | | 500.00 | 0.14 | 300.00 | 56.32 | 200 மீறறர் செயற்கை ஓடுபாதையில் அஸ்போல்ட் பொருத்துதல். |
| 04 | தலைவர் பங்களாவின் புணரமைப்பு பணிகள் - கட்டம் 1 | 10.00 | - | - | 10.00 | 8.22 | முதலாவது கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

**சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் 2018 ஆம் ஆண்டுக்காக உத்தேச அபிவிருத்திச் செயற்திட்டம்**

| தெ. இல. | செயற்பாடுகள் | வரவு செலவு ஒதுக்கீடு 2018 (ரூபா.மி) |
|---|---|---|
| 01 | 400 மீற்றர் செயற்கை ஓடபாதையின் எதிர்காலப் பணிகள் | 75.00 |
| 02 | 200 மீற்றர் செயற்கை ஓடபாதையின் எதிர்காலப் பணிகள் | 50.00 |

| | | |
|---|---|---|
| 03 | ஒளித்தொகுதியினை புணரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 220.00 |
| 04 | சூரிய சக்தி வலுத் தொகுதியினை தாபித்தல். | 225.00 |
| 05 | நேரக் கணிப்பீட்டுத் தொகுதி (நீச்சல்.ஓடுபாதை,மைதானம்) | 300.00 |
| 06 | பாரவையாளா் அரங்கினை மீள நிா்மாணித்தல் | 1200.00 |
| 07 | எல்லை மதில் மற்றும் இரும்பு வாயிலை புணரமைத்தல் (உள்ளக/திறந்த வெளி) | 150.00 |
| 08 | டி வாகன தரிப்பிடத்தை புணரமைத்தல். | 50.00 |
| 09 | விதித் தொகுதியினை புணரமைத்தல். | 50.00 |
| 10 | கெள்ளவு வங்கியினைத் தாபித்தல் | 25.00 |
| 11 | விளையாட்டு உபகரணத்தை கொள்வனவு செய்தல் | 30.00 |
| 12 | ஒளியூட்டல் தொகுதியினைத் தாபித்தல் (உள்ளக மற்றும் திறந்த வெளி) (LED) | 25.00 |
| 13 | ஸ்கொஸ் மைதானம், கூடைப் பந்து மைதானம்,வலைப் பந்துமைதானத்தை புணரமைத்தல். | 25.00 |
| 14 | கழிவு நீா் வடிந்தோடும் கால்வாய்த் தொகுதியினை புணரமைத்தல். | 20.00 |
| 15 | தள அலங்காரம் (உள்ளக/திறந்த வெளி | 25.00 |
| 16 | மக்கள் அழைப்புத் முறைமை (400 மீற்றா் மற்றும் 200 மீற்றா்) | 15.00 |

## ஆா். பிரேமதாஸ கிரிக்கட் விளையாட்டு மைதானம்

ஆா் பிரேமதாஸ கிரிக்கட் விளையாட்டு மைதானம் எமது நாட்டின் தேசிய மற்றும் சா்வதேச மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானமாகும். இதில் ஒரே தடவையில் 35,000 பாா்வையாளா்களுக்கு போட்டியைப் பாா்வையிட வசதிகள் காணப்படுவதுடன் பாரிய வாகனத் தரிப்பிடத்தையும் கொண்டது. இந்த விளையாட்டு மைதானம் 2006.05.10 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீா்மானத்திற்கமைய 2006.11.01 ஆம் திகதி தொடக்கம் முற்பது ஆண்டு காலத்திற்காக இலங்கை கிரிக்கட் நிறுவகத்திற்கு மாதத்திற்கு ரூபா. 250,000/- நிதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டில் டிசம்பா் 31 வரை இவ்விளையாட்டு மைதானத்தின் மூலம் ரூபா 3,000,000.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

சுகததாச விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையின் பிரதான வருமான மாா்க்கமாக காணப்படும் இவ் விளையாட்டு மைதானம் நீண்டகாலம் மாதாந்தம் மாற்றமடையாத குத்தகைக் கூலியுடன் குத்தகைக்கு வழங்கப்பட்டமை இவ் அதிகார சபையின் வருமானம் வீழ்ச்சியடைக் காரணமாக அமைந்துள்ளது.



## போகம்பற திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்

இவ்விளையாட்டு மைதானம் கண்டி நகர சபையினால் நிர்வகிக்கப்படுவதுடன் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் எமது அதிகார சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. இத் திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் ஒரே தடவையில் 10,000 ரசிகர்களுக்குப் போட்டியினைப் பார்வையிட முடியும். இதற்குத் தேவையான வசதிகள் விளையாட்டு மைதானத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. இங்கு மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், காற்பந்து, றகர், கரப்பந்து, வலைப்பந்து, பாடசாலை விளையாட்டு விழாக்கள் மற்றும் ஏனைய விழாக்களுக்கான வசதிகளும் வழங்கப்படுகின்றன.

இவ் விளையாட்டு மைதானத்திற்காக புதிய உடற்பயிற்சி மத்திய நிலையத்தை நிர்மானித்து அதற்காக நவீன உடற்பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் விளையாட்டு வீரர்கள்.·. வீராங்கனைகளைப் போன்று வெளிநபர்களுக்கும் இங்கு அங்கத்துவத்தைப் பெறத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.




பகிரங்க இசைக் கச்சேரிகள் போன்றவற்றிக்கு திறந்த வெளியரங்கு வாகனத் தரிப்பிடத்தை பயன்படுத்துவதற்காக இடவசதிகள் வழங்கப்படும் பட்சத்தில் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்ற போதிலும் விளையாட்டு மைதானத்தில் காணப்படும் விளையாட்டு வசதிகளுக்கு இழப்பீடுகள் ஏற்படும் என்பதனால் இவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

**2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை போகம்பற திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டித் தொடர்கள் மற்றும் விழாக்கள் தொடர்பான தகவல்கள் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றன.**

| | | |
|---|---|---|
| **பாடசாலை மெய்வல்லுனர் விளையாட்டு** | - | 40 |
| **மெய்வல்லுனர் விளையாட்டு** | - | 19 |
| **உதைப்பாந்தாட்ட போட்டி** | - | 19 |
| **றகர் போட்டி** | - | 12 |
| **பயிற்றுவிப்புக்கள்** | - | 02 |
| **ஏனையவை** | - | 05 |

**2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை இவ்விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற போட்டிகள், விழாக்கள் மற்றும் வாகனத் தரிப்பிடம், உடற்பயிற்சி மத்திய நிலையங்கள் மற்றும் ஏனைய தரப்பினர் ஊடாக ரூபா. 8,411,674.92 வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.**

## பெலியத்த மற்றும் வீரகெட்டிய நீச்சல் தடாகம்





**பெலியத்த நீச்சல் தடாகம்** **பெலியத்த பிரதான நீச்சல் தடாகம்**



**பெலியத்த நீச்சல் தடாகம்**

இந்நீச்சல் தடாகம் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது

**பெலியத்த –**

(I) 8 மருங்குகளைக் கொண்ட 50 மீற்றர் நீளமாக நீச்சல் தடாகம்

(II) சுழியோடும் தடாகம்

**வீரகெட்டிய -**

(ஐ) 08 மருங்குகளுடன் 25 மீற்றர் நீளம் கொண்ட நீச்சல் தடாகம்

பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வித்தியாலயத்தின் நீச்சல் தடாகப் வீரக்கெட்டிய ராஜபக்ஷ மத்திய மகா பராமரிப்பு மற்றும் நிர்வாகப் பணிகள்

மாத்திரம் 2008.08.07 ஆம் திகதி தொடக்கம் எமது அதிகார சபையினால் மேற்கொள்ளப் பட்ட போதிலும் அந்நீச்சல் தடாகங்களின் உரிமை சுகததாச அதிகார சபைக்குரிய தல்ல. அண்மையுள்ள பிரதேசங்களில் வயது வந்தவர்கள் மற்றும் பாடசாலை மாணவர் மாணவிகளுக்காக நீச்சல் பயிற்சிகளுக்காக வசதிகளை வழங்குவது நீச்சல் தடாக தேசிய கட்டிடத் தொகுதி அதிகார சபையினால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாட்டுப் பணியாகும்.

இந் நீச்சல் தடாகங்களில் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை மொத்த வருமானம் ரூபா. **723,753.00** ஆகும். இவ்விரு நீச்சல் தடாகம் தொடர்பாக வயது வந்தோர், பாடசாலை மாணவர் மாணவிகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் அறிவுறுத்தப்பட்ட போதிலும் பங்கேற்பு மிகக் குறைவாக இருப்பதனால் கூடுதலான வருமானத்தை எதிர்பார்க்க முடியாது.

மேலும் வீரகெட்டிய நீச்சல் தடாகம் அமைந்திருப்பது வீரகெட்டிய மத்திய மகா வித்தியாலய வளாகத்திலாகும். இதற்கமைய பிரவேசிப்பதற்கு வேண்டி ஏற்படுவது கல்லூரியின் பிரதான வாயிலில் என்பதனால் நீச்சல் தடாகத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முடியாதுள்ளது. இந் நீச்சல் தடாகங்களின் பராமரிப்புச் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு இணைவாக வருமானம் கிடைப்பதில்லை எனக் குறிப்பிட வேண்டும்.

## நுவரெலியா குதிரைப் பந்தய விளையாட்டு மைதானம்

2011.09.07 ஆந் திகதி விளையாட்டுத் துறை அமைச்சினால் நுவரெலியா குதிரைப் பந்தயத் திடலின் முகாமைத்துவம் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டது.






இந் நிலத்தின் அளவு 34,564 ஹெக்டயரான இக் குதிரைப் பந்தய விளையாட்டு மைதானத்தில் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையான குதிரைகளைக் கட்டும் இடத்தின் குத்தகைக்கூலி, குதிரை/ போணி சவாரிக்கான 10% கூலி பண்டிகைக் காலங்களுக்கான நிலத்தை கூலி அடிப்படையில் வழங்கல் மற்றும் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் கூலி மற்றும் ஆகியவைகள் மூலம் ரூபா. 4,013,016.41 வருமானமாக ஈட்டப்பட்டது.

# <u>அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்</u>

1 சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபை சட்டத்தை மறுசீரமைத்து 2017 இலக்கம் 14 கொண்ட சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபை மறுசீரமைப்பு சட்டமாக 2017.08.18 ஆம் திகதி பாராளுமனற வர்த்தமானி அறிவித்தலில் 11 ஆம் பிரிவு மேலதிகமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

2017 இலக்கம் 14 கொண்ட சுகததாச அதிகாரசபையின் சட்டம் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் பிரதான கொள்கைப் பிரகடணத்தன் 2 வது வாசகத்திற்கு பின்னர் சேர்க்கப்பட்ட புதிய வாசகம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2 (அ) வாசகமாக அமுல்படுத்துவதற்கு அதிகாரசபையின் நோக்கம் வகுக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் அண்டில் திறந்தவெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் 200 மீற்ற்ர் மற்றும் 400 மீற்றர் செயற்கை ஓடுபாதையை மீள தாபிப்பதன் மூலம் விளையாட்டு வசதிகளை விருத்தி செய்வதற்கும், உள்ளக விளையாட்டு மைதானத்தின் உள்ள விளையாட்டு ஹோட்டலை நவீனமயப்படுத்தி விளையாட்டு வீராகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதனைப் போன்று, வழங்கப்பட்டுள்ள வசதிகளின் கீழ் தேவைக்கு ஏற்றவாறு வெளித் தர்பபினருக்கு தங்குமிட வசதிகளை பெற்றுக் கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உள்ளக விளையாட்டுத் திடலின் வசதிகளில் வருடாந்தம் நடாத்தப்படும் கல்வி, கலாச்சார, மற்றும் களியாட்ட செயற்பாடுகளுக்காக ஒதுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அமைச்சரினால் முகாமைத்தவ சபையின் அங்கத்தவர் ஒருவர் அதிகார சபையின் செயற்பாடுகளை முகாமைத்துவத்திற்கு உட்படுத்தல் மற்:றும் நிர்வாக செயற்பாடுகளை இலகுபடுத்தும் வகையில் அதிகார சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளராக கடமையாற்றுவதற்காக நியமித்து அதிகார சபையின் நிருவாகப் பணிகளை தொடர்ந்தும் மேற்கொளளல்.


2 நுவரெலிய குதிரைப் பந்தய விளையாட்டு மைதானததை 10 ஆண்டுகால நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவது தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனம்.

நுவரெலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானத்தை 10 ஆண்டுகளுக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு அமைய பெறுகைச் செயற்ாடுகளுக்கு இணங்க குத்தகை கொள்வனவாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நிறுவனத்தின் முழுமையான முன்னேற்றங்கள்

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டுவரை நிறுவனத்தினால் ஈட்டப்பட்டுள்ள வருமானம் கீழ்க் குறிப்பிட்டவாறு தளம்பலடைந்துள்ளது.


| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 54.78 | 57.85 | 61.60 | 69.00 | 77.17 | 89.03 | 134.61 | 99.62 | 82.51 | 100.29 |




## நிறுவனத்தின் மொத்தக் கடன்

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டுவரை இருந்த கடன் நிலைமைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு தளம்பல் அடைந்துள்ளது.

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடன் | 2.30 | 4.61 | 133.03 | 42.95 | 42.04 | 41.00 | 45.00 | 44.00 | 43.70 | 40.254 |



சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை

# கணக்கீட்டுக் கொள்கைகள்
# 2017

## 01. பொதுவானது

### 1.1. ஒப்பீட்டு வெளிப்பாடுகள்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையின் கணக்கு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.2. தயாரிக்கும் அடிப்படை

நிதி வெளிப்பாடுகள், வரலாற்றுச் செலவினத்திற்கமைய தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காணி, கட்டடங்கள் மற்றும் இயந்திர உபகணரங்கள் மீள் மதிப்பீட்டுக்காக ஒப்பீடு செய்யும் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்போது பணவீக்க நிலைமை கருத்திற் கொள்ளப்படவில்லை

### 1.3. ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் இடம்பெறும் சகல அளவியல் ரீதியிலான அழுத்தங்கள் இருப்பின் அதற்காக நிதி அறிக்கைகளின் தேவையான ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவ் ஒப்பீடுகள் கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

## 02. சொத்துக்கள் மற்றும் அவற்றைப் பெறுமதி இடல் தொடர்பான அடிப்படை

ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களில் நடைமுறைச் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருப்பது நிதி மற்றும் வங்கி நிலைமை உட்பட கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டின் போது ஒரு வருடத்திற்குள் நிதியாக மாற்றியமைக்கக் கூடியவைகளாகக் கருதப்படும் பிரிவுகளாகும்.

### 2.1. சொத்துக்கள்

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகிய சொத்துக்களின் பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருப்பது திரண்ட தேய்மானம் குறைக்கப்பட்டதன் பின்னர் பெறுமதியாகும்.

கட்டடங்களில் சொத்துக்களின் இரத்துச் செய்யப்பட்ட செலவினமாக அமைவது பொருட்கள் மற்றும் நேரடி ஊழியர் செலவினமாகும். அத்துடன் நிலையான சொத்துக்கள் பிரதான உப பிரிவுகளாக வேறுபடுத்தப்பட்டிருப்பது அவற்றில் பயன்படுத்தப்படும் காலத்தைக் கருத்திற் கொண்டாகும்.

### ஆர். பிரேமதாஸ சர்வதேச விளையாட்டு மைதானம்

ஆர். பிரேமதாஸ சர்வதேச விளையாட்டு மைதானம் 2016.11.01 ஆம் திகதி தொடக்கம் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் மாதத்திற்கு ரூபா. 250,000/- அறிவிடப்படும் அடிப்படையில் 30 வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. 2006.12.31 ஆம் திகதியளவில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் நிர்மானிக்கப்பட்ட கட்டடங்களுக்கு சுகததாச விளையாட்டு கட்டடத் தொகுதி அதிகார சபைக்கு ரூபா 25,753,844.64 நிதி அறவிட வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக தற்போது அறிவிடப்படும் மாதாந்தக் கூலி தொடர்பில் இரு தரப்பினர்களுக்கிடையே பொதுவான இணக்கங்களை எட்ட எதிர்பார்க்கப்படுகின்றது.

**பெலியத்த மற்றும் வீரகெட்டிய நீச்சல் தடாகக் கட்டடத் தொகுதி**

பெலியத்த தொழில்நுட்பக் கல்லூாி மற்றும் வீரகெட்டிய ராஜபக்ஷ மத்திய மகா வித்தியாலத்திற்குரியதான இரு நீச்சல் தடாகங்கள் மற்றும் சுழியோடும் தடாகங்கள் 2008 ஆகஸ்ட் 07 ஆம் திகதி சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையினால் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிகார சபையின் முகாமைத்துவ அங்கீகாரத்திற்கமைய (10) ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

2008 ஆம் ஆண்டு இந் நீச்சல் தடாகங்களின் செலவினம் உள்ளக விளையாட்டுத் திடலின் செலவினமாக கணக்குகளில் பதியப்பட்ட போதிலும் முகாமைத்துவ சபையின் தீர்மானத்திற்கமைய 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இந்நீச்சல் தடாகங்களின் செலவினங்கள் தனியான கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2. ஏனைய செலவினங்கள்

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களில் அடங்கும் பங்குகளை மீளத் தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் தனியாகக் கணக்குகளில் பதியப்பட்டுள்ளதுடன் அவை மூலதனமாக்கி பயன்மிக்க ஆயுட்காலத்திற்குள் எழுதுவதற்காக கணக்குகளில் பதியப்பட்டுள்ள ஏனைய செலவினங்கள் மூலதன மயமாக்கப்பட்டிருப்பது அச் செலவினங்கள் மூலம் சொத்துக்களின் எதிர்காலப் பொருளாதாரப் பயன்களில் விருத்தி ஏற்படக்கூடிய செலவினங்கள் என்பதுடன் ஏனைய சகல செலவினங்களும் வருமான வெளிப்பாட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3. தேய்மானம்

தேய்மானக் கொள்கைகளாக குறுகிய மார்க்க முறைகள் பின்பற்றப்படுவதுடன் சொத்துக்களின் தேய்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது சொத்துக் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது நிர்மானிப்புக்கள் பூரணப்படுத்தப்பட்ட ஆண்டு தொடக்கமாகும். தேய்மானம் எதிர்பார்க்கப்பட்ட ஆண்டு காலத்திற்குள் வருமான செலவினக் கணக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. காணிக்கான தேய்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

| | |
|---|---|
| ➢ கட்டடம் மற்றும் நிர்மானிப்பு | 25% |
| ➢ அதிசக்தி வாய்ந்த மின் கோபுரம் | 10% |
| ➢ செயற்கை ஓடுபாதை | 20% |
| ➢ இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 10% |
| ➢ கணணி | 25% |
| ➢ மோட்டார் வாகனம் | 20% |
| ➢ விளையாட்டு உபகரணங்கள் | 10% |
| ➢ தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 10% |
| ➢ அலுவலக உபகரணங்கள் | 10% |
| ➢ திரைச்சீலை | 50% |
| ➢ அதிசக்தி வாய்ந்த மின் குமிழ்கள் (இக்னைட்டர்) | 33 1/3% |

32-5811 கொண்ட பஜரோ வண்டி மனிதவலு மற்றும் உள்ளீட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளமையினால் எமது அதிகார சபையின் சொத்தாகக் கருத முடியாது. அது தொடர்பான பராமரிப்புக்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமான செலவின வெளிப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

64-3180 பஜரோ வண்டி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளமையினால் எமது அதிகார சபையின் சொத்தாகக் கருத முடியாது. அது தொடர்பான பராமரிப்புக்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமான செலவின வெளிப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய வரவு செலவுச் சுற்றறிக்கை 150 ற்கமைய பொதுத்திறைசேரியினால் 9,100,000 பெறுமதியான NB - 1527 கொண்ட புதிய வான் வழங்கப்பட்டுள்ளது. இவ் வாகனத்தின் பெறுமதியாக காப்புறுதிப் பெறுமதி கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

தேசிய வரவு செலவுச் சுற்றறிக்கை 150 ற்கமைய பொதுத்திறைசேரியினால் ரூபா 7,500,000.00 பெறுமதியான PD - 9713 கொண்ட புதிய வான் வழங்கப்பட்டுள்ளது. இவ் வாகனத்தின் பெறுமதியாக காப்புறுதிப் பெறுமதி கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

தேசிய வரவு செலவுச் சுற்றறிக்கை 150 ற்கமைய பொதுத்திறைசேரியினால் 210,267.86 பெறுமதியான BBG-3006 கொண்ட புதிய மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. இவ் வாகனத்தின் பெறுமதியாக காப்புறுதிப் பெறுமதி கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

### 2.4. வர்த்தக மற்றும் ஏனைய கடன்படுனர்

வர்த்தக மற்றும் ஏனைய கடன்படுனர்கள் நிதி வெளிப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது அவற்றின் தேறிய திரண்ட பெறுமதியின் அடிப்படையிலாகும்.

### 2.5. தொகை

தொகை நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருப்பது செலவினத்திற்கு தொகைப் பெறுமதிகளின் முதலாவது கிடைப்பனவு, முதலாவது வெளிவழங்கல் முறைக்கமைய தீர்மானிக்கப்படுவதுடன் அதற்கான கொள்வனவுச் செலவினம் மற்றும் தொகை தற்போதைய நிலை மற்றும் உரிய இடத்திற்குக் கொண்டு வரும்வரை மேற்கொள்ளப்படும் சகல செலவினங்களுக்கும் உரியதாகும்.

## 03. ஒதுக்கீடு மற்றும் பொறுப்புக்கள்

நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும்போது இனங்காணப்பட்ட சகல பொறுப்புக்களும் கணக்குகளில் பதியப்பட்டுள்ளன. நிதி அறிக்கைகளில் நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருப்பது ஐந்தொகை தினம் தொடக்கம் ஆண்டுக்குள் செலுத்தி முடிக்க வேண்டியவைகள் அல்லது கோரப்படும் வேளையில் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாகும். நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் என்பது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்குள் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய பொறுப்புக்களாகும்.

### 3.1. ஊழியர் உரிமைகள்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பின் நிதியறிக்கைகளின் செலவினமாக இனங்காணப்பட்டுள்ளன.

### 3.2. வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அவற்றின் செலவினங்களுக்கமைய நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 3.3. ஊழியர் ஓய்வூதியப் பணிக்கொடை

பணிக்கொடைக்காக நிதி அறிக்கைகளில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முதலாவது சேவை ஆண்டு தொடக்கம் சகல ஊழியர்களும் இவ் ஒதுக்கீட்டுக்காக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளனர். இது இலங்கை கணக்கீட்டுத் தரம் 16 இற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுஎவ்வாறாக இருப்பினும் இக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது 1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்திற்கமைய உரிமைகளைப் பெற்ற தொடர்ச்சியாக 05 வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு மாத்திரமாகும்.

## 04. வருமான வெளிப்பாடுகள்

### 4.1. வருமானம்

இலங்கை கணக்கீட்டுத் தர இலக்கம் 29 இற்கமைய உரிய சேவைகளை வழங்கியதன் பின்னர் திரண்ட அடிப்படைக்கமைய வருமானம் இனங்காணப்பட்டுள்ளது.

### 1.2. செலவினம்

வருமான விபரத்தில் இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்பட்டிருப்பது வரிக்கு முன்னர் மற்றும் சகல இனங்காணப்பட்ட பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னராகும்.

தேறிய நிலுவையினைக் கருத்திற் கொள்ளும்போது சொத்துப் பராமரிப்பு மற்றும் வர்த்தகத்தை முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் வருமான விபரங்களுக்கு ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

நிறுவனத்தினால் வசதிகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தொலைபேசி, மின்சாரம், நீர்க் கட்டணம் மற்றும் வாடகை அறவீடுகள் பெறுவதுடன் உரிய செலவினம் குறிப்பிடப்பட்டுள்ளன.

#### நிதிச் செலவினம்

நிலையான சொத்துக்களாக வட்டி வருமானத்தின் திரட்டப்பட்ட முறைக்கு கணக்குகளில் பதியப்பட்டுள்ள வட்டி வருமானம் மற்றும் ஏனைய கடன் செலவினங்கள் நிதிச் செலவினங்களைக் கணிப்பீடு செய்யும்போது ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

#### கொடுப்பனவுகள்

வழங்கல்கள் மற்றும் உதவிகள் அதற்குரிய செலவினங்களுக்கு ஏற்றவாறு ஒப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. சொத்துக்களுக்கு உரிய நிதிசாராத

வழங்கல்கள் இதன் நிதிப் பெறுமதிக்கு கணக்குகளில் பதியப்பட்டுள்ளதுடன் அச் சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலத்திற்குள் வருமான வெளிப்பாடுகளில் குறிப்பிடப்படும்.

## 05. நிதிப்பாய்ச்சல் கூற்று

### 5.1. நிதி

நிதி என அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது கையிலுள்ள நிதி மற்றும் அதிஉயரிய திரவ நிலைமைகொண்ட நிதியாக மாற்றியமைக்கக்கூடியவாறு மாற்றியமைக்கும் போது எதுவித பாதிப்புக்களும் அற்ற சொத்துக்களாகும். இதற்காக நிதிப்பாய்ச்சல் கூற்றின் நிதி என்பது கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள நிதியாகும். நிதி வெளிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருப்பது மறைமுக அடிப்படையிலாகும்.

## 06. ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான சம்பவங்கள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் போதியளவு சம்பவங்கள் கருத்திற் கொள்ளப்பட்டிருப்பதுடன் தேவையான ஒப்பீடுகள் கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை

1. வருமான செலவின வெளிப்பாடுகள்
2. ஐந்தொகை
3. நிதிப்பாய்ச்சல் கூற்று

## வரவு செலவுத் திட்ட அறிக்கை

**2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை**

| | 2017.12.31 (ரூபா) | 2016.12.31 (ரூபா) |
|---|---|---|
| **வருமானம்** | 100,299,300 | 82,516,046 |
| | | |
| | 120,560,000 | 160,800,000 |
| அரச திறைசேரி ஒதுக்கீடு | | |
| **மொத்த வருமானம்** | **220,859,300** | **243,316,046** |
| | | |
| **செலவினம்** | | |
| **செயற்பாட்டுச் செலவினம்** | | |
| ஊழியர் சம்பளச் செலவினம் | 185,366,888 | 178,806,207 |
| முகாமைத்துவ சபை கொடுப்பனவு மற்றும் செலவினம் | 513,621 | 799,500 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 5,324,908 | 22,539,050 |
| தேய்மானம் | 94,524,071 | 89,648,834 |
| ஏனைய செலவினம் | 96,979,319 | 71,551,859 |
| | | |
| செயற்பாட்டு மிகை (பற்றாக்குறை) | **(161,849,507)** | **(120,029,404)** |
| மிகை பணிக்கொடை ஒதுக்கீடு | - | - |
| நிதிச் செலவினம் | (246,770) | (216,844) |
| வரிக்கு முன்னர் மிகை (பற்றாக்குறை) | **(162,096,277)** | **(120,246,248)** |
| | | |
| கூட்டு : செயற்பாடல்லாத வருமானம் | | |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 7,907,177 | 3,150,909 |
| முன்னைய வரி தேசிய மிகை (பற்றாக்குறை) | **(154,189,100)** | **(117,095,339)** |
| | | |
| **வருமான வரி** | (770,950) | **(307,214)** |
| **ஆண்டு மிகை (பற்றாக்குறை)** | **(154,960,050)** | **(117,402,554)** |

## ஐந்தொகை - 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| சொத்துக்கள் | 2017.12.31 (ரூபா) | 2016.12.31 (ரூபா) |
|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| நிதி மற்றும் வங்கி நிலுவை | (3,567,111) | 76,663,031 |
| கடன்பட்டோர் | 12,876,630 | 10,811,023 |
| இருப்பு | 10.985,193 | 11,483,637 |
| பணிக்குழுவிற்கான பத்து மாதக் கடன் கொடுப்பனவு | 24,127,690 | 21,507,043 |
| முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய நிலுவை | 143,111,309 | 104,938,717 |
| | **187,533,711** | **225,403,451** |
| **நிலையான சொத்துக்கள்** | | |
| காணி | 2,856,612,140 | 2,856,612,140 |
| கட்டடம் | 1,207,974,723 | 1,243,588,617 |
| அதிசக்தி வாய்ந்த மின்கம்பம் | 1.372,978 | 1,372,978 |
| அதிசக்தி வாய்ந்த மின்குழிழ் | 1,266,922 | 1,266,922 |
| இயந்திர உபகரணங்கள் | 113,862,746 | 93,062,982 |
| கணணி | 7,033,758 | 3,517,471 |
| மோட்டார் வண்டி | 230,068 | 376,222 |
| விளையாட்டு உபகரணங்கள் | 35,279,079 | 27,459,563 |
| மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 15,584,202 | 17,832,243 |
| அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள் | 7,085,560 | 8,023,582 |
| திரைச்சீலை | - | 616,564 |
| நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் | 668,713,029 | 297,146,860 |
| நிலையான சேமிப்பு | 33,135,557 | 32,924,319 |
| | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | |
| **மூலதனப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் - நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வர்த்தகக் கடன்படுனர் | 26,419,723 | 7,532,472 |
| பாதுகாப்பு வைப்பு | 10,407,436 | 9,115,537 |
| பாதுகாப்பு வைப்பு | 329,439 | 2,869,115 |
| கிடைக்கப் பெற்ற முற்பண நிதி | - | 500,000 |
| குத்தகை ஒதுக்கீடு | 1.563,190 | 792,240 |
| திரண்ட செலவினம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினம் | 17,166,270 | 13,173,499 |

| | | |
|---|---|---|
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 86,169,233 | 70,181,833 |
| | | **104,164,696** |
| | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | 67,654,232 | 65,369,896 |
| | | **65,369,896** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **209,709,523** | **169,534,593** |
| **தேறிய சொத்து** | **4,925,974.885** | **4,639,669,328** |
| **தேறிய சொத்து / மூலதனப் பங்குகள்** | | |
| அரச வழங்கல் | 6,597,462,609 | 6,160,621,609 |
| திரண்ட நிதியம் | (1,525,862,328) | (1,412,884,380) |
| மீள் மதிப்பீட்டு மிகை | 9,334,652 | 9,334,652 |
| ஆண்டின் மிகை / குறைபாடுகள் | (154,960,050) | (117,402,554) |
| **மொத்த மூலதனப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | **4,925,974,885** | **4,639,669,328** |

# நிதியத்தின் நிதிப் பாய்ச்சல் கூற்று

## 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2017.12.31 (ரூபா) | 2016.12.31 (ரூபா) |
|---|---|---|
| **செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | | |
| **வரிக்கு முன்னர் மிகை அல்லது தேறிய குறைபாடுகள்** | **(154,960,050)** | **(117,402,554)** |
| | | |
| திரண்ட நிதியத்திற்கு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தேய்மான ஒப்பீடு | | |
| தேய்மான ஒதுக்கீடு | 94,524,071 | 89,648,834 |
| | | |
| | | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 5,324,908 | 22,539,050 |
| | | |
| (அதிகரிப்பு/குறைவு தொகை | 498,445 | 4,103,390 |
| (அதிகரிப்பு/குறைவு கிடைக்க வேண்டிய நிலுவை | (42,976,891) | (14,780,867) |
| (அதிகரிப்பு/குறைவு செலுத்த வேண்டிய நிலுவை | 37,890,595 | 18,814,526 |
| பணிக்கொடை கொடுப்பனவு | (3,040,572) | (1,384,325) |
| **செயற்பாடுகளில் பெறப்பட்ட தேறிய நிதி நிலுவை** | **(62,739,495)** | **(6,668,726)** |
| | | |
| முதலீட்டு செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல் | | |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் இயந்திர உபகரணக் கொள்வனவு | (458,663,060) | (224,303,395) |
| வரிக் கொடுப்பனவு | | |
| நிலையான வைப்புக்களின் முதலீடு | (93,193) | |
| REPO முதலீடு | - | 180,000,000 |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதி நிலுவை** | **(458,756,253)** | **(63,303,396)** |
| **நிதி செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | | |
| திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் | 4,424,606 | 92,718 |
| அரச மூலதன வழங்கல் | 436,841,000 | 175,250,000 |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதி நிலுவை** | **441,265,606** | **175,342,717** |
| | | |
| நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் மூலம் பெற்ற தேறிய அதிகரிப்பு | (80,230,142) | 105,370,596 |
| ஆண்டு ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் அண்மித்தவைகள் | 76,663,031 | (28,707,565) |
| **ஆண்டு இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் அண்மித்த நிலுவை** | **(3,567,111)** | **76,663,031** |

# வருமானம் - 2017

| விளையாட்டு அரங்கு | செயற்பாட வருமானம் | செயற்பாடல்லாத வருமானம் |
|---|---|---|
| சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கு | 53,844,836 | 848,230 |
| திறந்த வெளி விளையாட்டு அரங்கு | 24,933,858 | 419,120 |
| ஆர். பிரேமதாஸ கிரிக்கட் விளையாட்டு மைதானம் | 3,000,000 | - |
| போகம்பற திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம் | 9,839,805 | 203,289 |
| பெலியத்த மற்றும் வீரகெட்டிய நீச்சல் தடாகம் | 723,753 | 17,959 |
| நுவரெலியா குதிரைப் பந்தய விளையாட்டு மைதானம் | 5,125,816 | 12,280 |
| திகனா விளையாட்டு அரங்கு | 1,330,352 | - |
| **மொத்த வருமானம்** | **98,798,421** | **1,500,879** |

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபை

# கணக்காய்வாளரின் அறிக்கை

# 2017

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. சீஏஸ்/ஏ/எஸ்என்எஸ்சீஏ/1/17/04
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2018 ஒக்தோபர் 15

தலைவர்,
சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை

**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1**

நியமத்தின் 48 ஆம் பிரிவின் பிரகாரம் தேவைப்படும் அல்லது அனுமதியளிக்கப்படுமிடத்து அல்லாது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பன எதிரீடு செய்யப்படலாகாதெனினும், அதற்கு முரணாக ரூபா 3,567,111 காசேட்டு செலவு மீதி (மேலதிகப்பற்று) நடைமுறைப்பொறுப்பின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக காசு மற்றும் காசுக்கு நிகரானவையாக உள்ளடக்கப்பட்டு நடைமுறைச் சொத்துக்களிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

(i) நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபை மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள ரூபா 27,377,431 நட்டக் கடன் நிதியேற்பாட்டிற்கு நிச்சயமானதொரு கணக்கீட்டுக் கொள்கையை இனங்கண்டிருக்கவில்லை.

3

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ii) நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமானது முன்னைய ஆண்டுகளுக்குரிய குறிப்பிடத்தக்க தவறுகளின் பொருட்டு, தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டுப் பெறுமதிகளை மீள வெளியிடுவதன் மூலம் கடந்த காலத்திற்கேற்றவாறு சீராக்கம் செய்ய வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாது 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4,424,606 சீராக்கலை உரிமை மூலதன மாற்றக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 472.3 மில்லியன் கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தபோதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது 03 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 9**

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நெடுங்காலமாக மெதுவாக நகர்ந்தவாறிருக்கும் ரூபா 1,296,163 பெறுமதியுடைய கையிருப்பு கிரயத்தில் காட்டப்பட்டுள்ளபோதும், அக்கையிருப்பானது நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதி எனும் இரண்டில் எது குறைவானதோ அப்பெறுமதியில் நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மிளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புகளினதும் ஏழு நாள் வைப்புகளதும் வட்டி வருமானம் ரூபா 1,450,747 ஆகியபோதும், அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 7,907,177 ஆகக் காட்டப்பட்டமையால் நிலையான வைப்பு வருமானம் ரூபா 6,456,430 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

4

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஆ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், நிலையான மற்றும் ஏழுநாள் வைப்புகளது மீதி ரூபா 29,860,199 ஆகியபோதும், வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 29,850,879 ஆகியமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்மீதி ரூபா 9,320 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வினது கணிப்பீட்டின் பிரகாரம் பெற வேண்டிய ஏழு நாள் வைப்பு வட்டி ரூபா 7,685,674 ஆகியபோதும், நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 13,025,821 ஆகக் காட்டப்பட்டமையால் பெற வேண்டிய வட்டி ரூபா 5,340,147 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மூலதன மானியத்தைக் காலக்கழிவு செய்வதற்கான கொள்கை ஒன்று நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்த போதும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறாக அதிகார சபையின் மூலதன மீதியில் உள்ளடங்கிய ரூபா 3,749,785,477 மூலதன மானியத்தைக் கிரமமான அடிப்படையில் வருமானத்தில் பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியதாகக் காட்டப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 33,252,709 ஆகும். இதில் ரூபா 44,609,847 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மீளளிப்புச் செய்யப்பட முடியாததாகக் குறிப்பிடப்பட்டிருந்தும், தொடர்ந்தும் அது பெற வேண்டியவனவாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவைக் கட்டண அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பொருளாதாரச் சேவை வரி 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்ததாக இருப்பின் அதனைக் கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரியில் கழித்துக்கொள்ள முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2013 முதலாக இருந்து வரும் ரூபா 679,535 பொருளாதார சேவைக் கட்டணம் பெற வேண்டியனவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(எ) விளையாட்டுக் கூட்டுத் தொகுதியின் முடிவடைந்த 17 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 426,031,447 கிரயமானது மூலதனமாக்கப்படாது முடிவடையாத வேலையாகக் காட்டப்பட்டமை காரணமாக கட்டிடக் கிரயம் அதேயளவு குறைவாகவும் தேய்மானம் ரூபா 13,127,167 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

5

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை வொலிபோல் சம்மேளனத்திடமிருந்து ரூபா 3,332,206 அறவிட வேண்டியுள்ளதாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், அச்சம்மேளனத்தின் கணக்குகளின் பிரகாரம் அது ரூபா 987,449 ஆகியமையால் ரூபா 2,344,757 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து ரூபா 1,942,827 அறவிட வேண்டியுள்ளதாக அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்குகளின் பிரகாரம் அவ்வாறான பொறுப்பு காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடமிருந்து ரூபா 16,553,844 அறவிட வேண்டியுள்ளதாக வர்த்தகக் கடன்பட்டோரில் அது உள்ளடக்கப்பட்டிருந்தபோதும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கணக்குகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 15,973,848 ஆகியமையால் ரூபா 579,999 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி 24,127,690 ஆகியபோதும், குறித்த பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 24,054,734 ஆகியமையால் ரூபா 72,956 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேர்ந்து நின்ற செலவினம் மற்றும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதி ரூபா 24,938,220 ஆகியபோதும், அவற்றிற்குரிய பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 23,958,220 ஆகியமையால் ரூபா 4,277,530 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வர்த்தகக் கடன்பட்டோர் | 37,249,399 | காலப்பகுப்பாய்வும் ரூபா 20,368,013 க்கான மீதிகளது உறுதிப்படுத்தலும் |
| (ஆ) | ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கு கையிருப்பு | 2.149,491 | பட்டோலை / நேரடி சரி பிழை பார்த்தல் அறிக்கைகள் |
| (இ) | நிலையான சொத்துக்கள் | 4,915,015,139 | நேரடி சரி பிழை பார்த்தல் அறிக்கைகள் / நிலையான சொத்துப் பதிவேடு |
| (ஈ) | 400 மீட்டர் ஓட்டப் பாதைக்குச் செலுத்த வேண்டிய தொகை | 13,713,615 | மீதிகளை உறுதிப்படுத்தல் |

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுப்பனவு செய்ய வேண்டிய வர்த்தக மீதியில் உள்ளடங்கிய 04 ஆண்டுகளாகவுள்ள ரூபா 463,443 கூட்டுத் தொகையுடைய 10 கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளுக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரி தொடர்பாக ரூபா 8,939,262 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அவ்வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவோ அல்லது தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) பதினொறு ஆண்டுகளாக கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா 1,124,068 தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

7

ජාතික විගණන කාර්යාල
தேசிய கணக்காய்வு அலுவலக
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 891(1) என்பன | காசாளர்களாகப் பணியாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதிகாரசபை பிணைப் பதிவேட்டைப் பேணவுமில்லை. |
| (ஆ) 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டரங்கு கூட்டுத்தொகுதி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு | முகாமைத்துவச் சபை மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், 2017 ஏப்ரல், யூன், செப்டெம்பர் மாதங்களில் முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பணி முடிவடைந்தவுடனேயே பெறப்பட்ட முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும், 2013 முதல் 2016 வரை கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 825,252 முற்பணத்தைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

8

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிப் பெறுபேறு ரூபா 154,960,050 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 117,402,554 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் மேலும் 32 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 37,557,496 நலிவு தென்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மானியம் 25 சதவீதமாக ரூபா 40,240,000 குறைவடைந்தமை மேற்படி நிதிப் பெறுபேற்றிலான நலிவு அதிகரித்தமைக்கான பிரதான காரணியாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 முதல் 2017 வரை நிதிப் பெறுபேற்றில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் பற்றாக்குறை குறைவடைந்திருந்தது. எனினும், மீண்டும் மீளாய்வாண்டின்போது ரூபா 37,557,496 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் மற்றும் அரசாங்க வரி என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 106,361,763 ஆகவிருந்த அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 125,701,859 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது சபையின் நடைமுறை விகிதம் 2.47 முதல் 1.55 வரையாகவும் துரித விகிதம் 2.36 முதல் 1.47 வரையாகவும் குறைவடைந்திருந்தன. அதற்கமைய, நிறுவனத்தின் குறுகிய காலப் பொறுப்புகளைத் தீர்வு செய்யும் ஆற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நலிவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபை அரச வங்கி ஒன்றில் ஏழுநாள் வைப்பில் முதலீடு செய்திருந்த தொகை ரூபா 24,919,980 ஆகும். அத் தொகையை

9

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நெடுங்கால நிலையான வைப்பில் முதலீடு செய்திருப்பின் கூடிய வருமானத்தைப் பெற்றிருக்கலாம் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, அதிகாரசபை சாதகமான நிதிசார் நிலைமையைப் பெறும் வாய்ப்பு தவறியிருந்தது.

4.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சுகததாச விளையாட்டரங்கில் உள்ள ரூபா 7,617,787 கையிருப்பில் (Indoor and out door) 2016 முதல் 2017 வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,080,319 பெறுமதியான கையிருப்பு பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறும் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி நிரல்" தொடர்பாக அதிகாரசபை இணையதளத்தின் மூலம் அறிந்திருந்தபோதும், தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளுக்குரிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை அடையும் விதம் மற்றும் இலக்கை அளவிடுவதற்கான அளவு கோல் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை இனங்கண்டவாறு இருப்பதாக அதிகாரசபை இது தொடர்பாக விளக்கமளித்திருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) கடன்பட்டோரது அதி கூடிய எல்லைகளும் காலமும் சம்பந்தமாக எல்லைகள் நிர்ணயிக்கப்படாமை |

10

(ii) கடன்பட்டோரின் மீதி உறுதி செய்யப்படாமை.

(iii) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளைத் தாமதமின்றித் தீர்த்து வைக்காமை.

(ஆ) கணக்கீடு

(i) நிலையான வைப்பு வட்டியைச் சரிவரக் கணித்துக் கணக்கிலிடாமை.

(ii) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டடத் தொகுதி அதிகார சபையின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பான 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)(சி) பிரிவிற்கமைய கணக்காய்வாளரின் அறிக்கைக்காக சமகாலப்படுத்தப்பட்ட தகவல்கள்

**2.2.1** இலங்கை அரச கணக்கீட்டுத் தரம்

(அ). இணங்குகிறேன். எதிர்காலத்தில் திருத்தியமைக் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இணங்குகரேன், அறவிடமுடியாக் கடன் கொளகை இணங்கானப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் முகாமைத்துவ சபைக்கு சமர்பித்து அங்கீகாரததைப் பெறுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இணங்குகிறேன். 2017.12.31 ஆம் திகதியன்று ரூபா. 1,296,163.00 நீண்டகாலமாகக் காணப்பட்ட இருப்பு 2018.08.31 ஆம் திகதியன்று ரூபா. 954,419,.85 வரை தேவையினை இணங்கண்டு பயண்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இருப்பு தர இலக்கம் 09 இல் 15 இற்கமைய மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக் நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இணங்குகிறேன், சொத்து மீள் மதிப்பீடுகளை மேற்கொள்ள எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) இணங்குகிறேன், சொத்து மீள் மதிப்பீடுகளை மேற்கொள்ள எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.2** கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) இணங்குகிறேன், 2018.12.31 ஆம் திகதியன்று திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இணங்குகிறேன், 2018.12.31 ஆம் திகதியன்று திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) இணங்குகிறேன், 2018.12.31 ஆம் திகதியன்று திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(ஈ) இணங்குகிறேன், திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(உ) இணங்குகிறேன்,

(ஊ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.

(எ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்

(ஒ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்

**2.2.3** தெளிவுபடுத்தப்படாத மாற்றங்கள்

(அ) இணங்குகிறேன், 2018.12.31 எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுளளது.
(ஆ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.
(இ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.
(ஈ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.
(உ) இணங்கவில்லை, நிலையான சொத்து ஆவணத்துடன் நாளே: ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.4 கணக்காய்விற்காக சாட்சிகள் இன்மை

(அ) இணங்குகிறேன், 2018.12.31 எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுளளது.

(ஆ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(இ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(உ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(ஊ) இணங்குகிறேன

(எ) எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(ஏ) இணங்கவில்லை,

(ஒ) இணங்குகிறேன், 2018.12.31 எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுளளது

## 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) இணங்குகிறேன். 2018.08.31 திகதி எடுக்கப்பட்ட முகாமைத்துவ தீர்மானத்தை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

(ஆ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(இ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

## 2.4 சட்டம், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை

(அ) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது ඇත.

(ஆ) இணங்குகிறேன். இருப்பினும் 2017 மாாச் மாதத்தில் 2 ஆவது தினம் மற்றும் 14 வது தினதத்தில் முகாமைதததுவ சபையின் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கமைய கூட்டங்கள் ஜுன் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மாத்திரமே நடைபொறவில்லை.

(இ) இணங்குகிறேன் . இந் நிதி மூலம் ரூபா 552,958.00 நிதி 2018.09.15 ஆம் திகதி தொடக்கம் தீர்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 2018.09.11 ஆம் திகதி இடமபெற்ற கணக்காய்வு மற்றும் முகமைத்துவ சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவாறு இது வரையில் தீர்க்கப்படாத முற்பண நிதி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்குமாறு அவ் உத்தியோகத்தர்களினால் பிரிவுப் பொறுப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையினால் அது தொடர்பில் கண்டறிந்து முற்பண நிதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

இணங்குகிறேன.

### 3.2 விளக்கமான நிதி மீளாய்வு

இணங்குகிறேன

## 4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

இணங்குகிறேன், 2018 ஏப்ரல் மாதத்தில் தவறினை திருத்தி அமைத்து ஏழு நாள் அறிவத்தல் வைப்பினை இரத்து செய்து நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**4.2. செயலிலந்த மற்றும் குறை பயண்பாடுகள் கொண்ட சொத்துக்கள்**

2017.12.31 ஆம் திகதியன்று ரூபா. 1,080.319 இருப்பு அளவிற்காக இணங்கிறேன்.2018.08.31 ஆம் திகதி அளவில் இவ் இருப்பு நிலுவையாக அமைவது 954,419.85 ஆகும்.

**5. நிலையான அபிவிருத்தி**

இணங்குகிறேன், எதிர்காலத்தில் நிலையான நோக்கத்திற்காக கூடுதலான கவனத்தை செலுத்த உத்தேசிக்ககப்பட்டுளளது

**6. முறைமை மற்றும் நிருவாகம்**

(அ) கடன்படுனர் மற்றும் கடன் நிருவாகம்.

(i) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(ii) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது.

(iii) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

**(ஆ) கணக்கியல்**

(i) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

(ii) இணங்குகிறேன், எதிர்காலத்தில் திருத்தியமைக்க நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது

**සුගතදාස ජාතික ක්‍රීඩා සංකීර්ණ අධිකාරිය,**
**තැ.පෙ.2211, ආතර් ද සිල්වා මාවත,**
**කොළඹ 13.**

**දූරකථන : 0112 384 385 / 0112 384 490**
**ෆැක්ස් : 0112 44 56 75**
**විද්‍යුත් තැපැල් : sugathadasaindoor@gmail.com**

**බෝගම්බර ක්‍රීඩාංගනය : 081 22 35 395**
**නුවරඑළිය තුරඟ තරඟ පිටිය : 052 22 22 659**
**බෙලිඅත්ත පිහිණුම් තටාකය : 047 22 51 685**